அறிவராய வெளியீடு — (5)

# கொக்கூர்கிழான் கவிதைகள்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

கொக்கூர்கிழான்
கா. வை. இரத்தினசிங்கம்

ரூபா 1-65 சதம்

முதற்பதிப்பு ஒக்ரோபர்—1977
பதிப்புரிமை ஆசிரியருக்கே

அறிவரசய வெளியீடு—(5)

வெளியிட்டோர் : அறிவரசய்ம்
36, முகாந்திரம் ரோட்
கொழும்பு—3.

சிதறல்

## இன்பம்

(குறள் வெண்பா)

நன்னூற் பயிற்சியும் நல்லா ரிணக்கமும்
எந்நாளும் இன்பந் தரும்

## புகழ்

(அறுசீர் விருத்தம்)

நன்னடை பயில்தல் வேண்டும்
நாலுபேர் போற்றல் வேண்டும்
புன்னகை முகத்தில் தாங்கி
பொலிவுடன் திகழ்தல் வேண்டும்
மன்பதை உயர்வு உன்னி
மகிழ்வுடன் பணிகள் ஆற்றி
நின்புகழ் நீணி லத்தே
நிலைத்திடச் செய்வாய் கண்ணே

## வாலறிவு

(குறள்வெண்பா)

வாலைப் பருவத்தே வாலறிவு பெற்றால்தான்
சேலைப் பருவஞ் சிறக்கும்

## மாயக் குரங்கு

(குறள் வெண் செந்துறை)

மனமெனும் மாயக் குரங்கை
மடக்கி நீ அடக்கா விட்டால்
நினையது அடக்கி தானே
நினைத்தவா றாட்டி வைக்கும் (1)

அதுஒரு நிலையில் நில்லா
தலையுமே அங்கு மிங்கும்
அதன்வழி நீயுஞ் சென்றால்
அமைதியை யிழந்து தவிப்பாய் (2)

அமைதியே இன்பம் நல்கும்
அமைதியே தெளிவு நல்கும்
அமைதியே அறிவுக் கழகு
அமைதியை அடைய முயல்க (3)

# அறிவு

(அறுசீர் விருத்தம்)

உற்றவரை ஊரவரை
உடன்பிறந்தார் பற்பலரை
உலகில் யானும்

பற்றுடனே வைத்திருந்து
பாராட்டிப் பலகாலம்
பரிவில் வாழ்ந்தேன்

அற்புதமார் உன்பெருமை
அறிந்ததுவும் அவரையெலாம்
அறவே விட்டேன்

கற்புடையாய் உன்பெருமை
காசினியில் அடியேனும்
கழறப் போமோ

# உறவு

(அறுசீர் விருத்தம்)

வறுமையின் பிடியிற் சிக்கி
வாடிய போதும் எங்கள்
சிறுமனை நண்ணுச் சுற்றம்
செகத்தினில் சுற்ற மாமோ
உறவினர் உடன்பி றந்தார்
உற்றவர் மற்றோர் எல்லாம்
உறுபொருள் உடையார்க் கன்றி
உலகினில் மற்றோர்க் குண்டோ

# பந்தம்

(நேரிசை வெண்பா)

வந்தவுடன் கூறிடுவார் வந்தனங்கள் பற்பலபின்
தந்தமெலாங் காட்டி சலுகைபெற—பந்தம்
பிடித்துநாளும் வாழ்கிற பண்பிழந்த எம்மோர்
மிடிதீர வுண்டோநல் லாறு

கஞ்சி குடித்தாலும் கந்தை யுடுத்தாலும்
விஞ்சு திறமை யிருக்குமட்டும் — நெஞ்சில்வை
பஞ்சந் தனைப்போக்க பந்தம் பிடித்திடேன்
வந்த வழிக்கே இழுக்கு

## மனிதச் சேய்

(அறுசீர் விருத்தம்)

நாயாகப் பிறந்திருந்தால்
நடுவீட்டில் இடந்தருவீர்
நாலு பேர்முன்
வாயாரப் புகழ்ந்திடுவீர்
வயிறூர உணவிடுவீர்
யானோ மனிதச்
சேயாகப் பிறந்ததனால்
தெருவினிலு மிடமின்றி
திட்டும் வாங்கி
ஓயாத கவலையினால்
உளம்நொந்து உடல்நைந்து
உழல்கின் றேனே

## கசையடி

(எண்சீர் விருத்தம்)

யாழ்ப்பாணக் கவிராயர் யாத்த ளித்த
யாப்புவழு நிறைகவிதை யளித்த நீசா
யாழ்ப்பாண மரபறியா மரமே மாவே
யாரிடம் நீ யாப்புகற்றாய் யாடே மாடே
சீழ்ப்பிடித்து விட்டதடா உன்றன் மூளை
சிறுமைநமக் குற்றதடா நின்செய் கையால்
கீழ்ப்பாக்கக் கிறுக்குகளுக் கீழ நாட்டில்
கசையடிதான் கொடுத்திடுவான்
யாழ்ப்பா ணத்தான்

## தூக்கம்

(எண்சீர் விருத்தம்)

நின்வரவை எதிர்பார்த்து நீல வான்கீழ்
நீண்டநேரம் நான் நடந்தேன் நினைவி ழந்து
மின்னலொன்று மேகத்தைக் கிழித்து வானில்
மீனினத்தை மிரட்டியதும் நான்பய த்தால்
என்னறையுள் புகுந்துவாயில் கதவை மூடி
ஏக்கமிகு உளத்தனாகி பஞ்ச ணையில்
உன்னணைப்பில் இன்பமுற எண்ணி வீழ்ந்தேன்
ஓடியென்னை அணைத்தின்பம் தந்தாய் அன்பே

## இரக்கமற்ற உள்ளம்

(எண்சீர் விருத்தம்)

அன்புமகள் பராசத்தி இறப்பால் உற்ற
    ஆழ்துயரை நிவிர்த்திசெயஎண்ணிச்செய்த
இன்கவிநூல் தொகுப்பதனை சுவைத்த காலே
    இரக்கமற்ற என்னுளத்தில் முகிழ்த்த
                                                            எண்ணம்
என்னவென எடுத்துரைப்பேன் கேளும் ஐய
    ஏற்றமிகு தரமான தொகுப்பு நூல்கள்
இன்னுமின்னும்இதுபோலத்தோன்றவேண்டின்
    இருக்குமுங்கள் பிள்ளையாவும் இறத்தல்
                                                            வேண்டும்.

## கலையுலகம்

(அறுசீர் விருத்தம்)

மன்பதையின் துறைகளெலாம்
    மாபெரிய தெருவுகளாய்
        வயங்க வாங்கே
மின்னுகலை யுலகமெனும்
    தெருவினிலே உள்ளங்கள்
        மின்ன வில்லை
எண்ணங்கள் மின்னவில்லை
    மெய்யழகும் உளவழகும்
        மெள்ள இரையாய்க்
கொண்டிருக்கே என்றுள்ளம்
    குமுறுகின்றார் ஆசிரியர்
        கூர்ந்து பாரும்

## ஞாயிற்றின் மறைவு

(அறுசீர் விருத்தம்)

காடுகள் திருத்திச் செந்நெற்
    கழனிகள் செய்து நாளும்
பாடுபட் டுழைக்கு மேழை
    பயனெலாம் பிறர்கொண் டேக
நீடுயர் நெஞ்சம் மேவ
    நிலத்தினை நயனம் நோக்க
வீடுசென் றடைதல் போல
    விரிகதிர் மேற்க டைந்தான்

(மணிவர்ணன் — தேசாபிமானி 22 - 2 - 64)

# முத்தம்
(நேரிசை வெண்பா)

பாறி விழுந்த பழஞ்சுவர் மேற்பல்லி
ஏறியிருந் திச்சிச் செனுமாபோல்—நாறிருங்
கூந்தன் மனையாளைக் கூடிக் களிக்கையிலே
ஈந்தனன் முத்தம் இனிது

# அவளை மற
(நேரிசை வெண்பா)

இன்று வருவாளோ நாளை வருவாளோ
நின்று மறுநாள் வருவாளோ—என்றெண்ணி
நாளும் நினைந்தவளை நன்னெஞ்சே நீநலியேல்
பாழும் அவளை மற

தமிழும்
தமிழரும்

# தமிழ்
(கலி விருத்தம்)

மூவர் காவலில் மொய்ம்புற வாழ்ந்தவள்
காவல் குன்றிடக் கற்பினைக் காத்திட
நாவ லன்புகழ் நற்றமிழ் நாட்டிடைத்
தாவிப் புக்கனள் தாடுணை போற்றுவாம்

# யாழ் நூல்
(அறுசீர் விருத்தம்)

பைந்தமிழ்நூல் பலகற்றுத்
துறைபோய பண்டிதர்மார்
பலரி ருந்து

முந்தையர்செய்ந் நூல்களெலாம்
நுனித்தறிந்து வரம்பிகவா
மொழிவ ளர்க்க

அந்தமிழோ டாரியமும்
ஆங்கிலமும் கற்றறிந்த
அடிகள் விபுலா

நந்தனிசைத் தமிழ்நுணுக்கம்
நன்காய்ந்து யாழ்நூலை
நல்கி னனே

## எவரினிக் காப்பா ரிங்கே

(அறுசீர் விருத்தம்)

முன்னரிந் நாட்டு வாழ்ந்த
முதுதமிழ்ப் புலவ ரெல்லாம்
பன்னரும் இனிமை மிக்க
பழந்தமிழ் நூலிற் தேறி
சொன்னயம் பொருண யங்கள்
தோன்றுநன் னூற்செ றித்தே
என்னருந் தமிழே உன்றன்
எழில்நலன் காத்து வந்தார் (1)

அன்னவர் வழியில் உன்றன்
அருமையை நுணுகி ஆய்ந்து
மன்பதை யாண்டும் முன்போல்
மாண்புடன் வயங்க வைக்க
இந்நிலப் பரப்பில் யாரும்
இன்றிலை என்றால் அந்தோ
என்னருந் தமிழே உன்னை
எவரினிக் காப்பார் இங்கே (2)

(கொக்கூர் கிழான் — ஈழநாடு — 10 - 5 - 64)

## இந்த நிலை மாறவேண்டும்

(அறுசீர் விருத்தம்)

செந்தமிழ்ப்பேர் பலவிருக்கச்
செத்தமொழிப் பெயரெடுத்துச்
சிறுருக் கிட்டு

சிந்தைமிகக் களிக்கின்றீர்
செந்தமிழர் நீர்தாமோ
சிச்சீ சிச்சீ

இந்தநிலை மாறவேண்டும்
இனியதமிழ்ப் பெயரிடுதல்
வேண்டும் என்றும்

எந்தமிழை எம்மவர்தாம்
போற்றிடுதல் வேண்டுமடா
இளைய தமிழா

## பாமாலை

(நேரிசை வெண்பா)

செந்தமிழ்ச்சொல் தேர்ந்தெடுத்து செவ்வியநற் பாத்தொடுத்து
பைந்தமிழ்க்குச் சூடினனே பாமாலை
—அந்தமிழிவ்
வாழிசூழ் வையமிசை வாழுவரை வாழுமே
நீளிசையோ டென்றும் நிலைத்து

## அம்பா அம்மா அம்மே

(அறுசீர் விருத்தம்)

அம்மா என்பது தமிழ்ச்சொல்லாம்
அன்னை தமிழை அறியாதார்
சும்மா வாயில் வந்தவற்றை
சொல்லி அறிஞர் ஆய்விடுவார்
அம்பா என்ற வடசொல்லின்
அரிய தமிழ வடிவந்தான்
அம்மா என்ப தறிந்திடடா
ஆய்ந்து கண்ட முடிவிதடா (1)

இன்னும் இதுபோல் வடசொற்கள்
இயம்பில் பலவே தமிழ்மொழியில்
பின்னிப் பிணைந்து கிடக்குதடா
பேதைத் தமிழன் இவற்றையெலாம்
அன்னை தமிழாம் என்றுரைத்தால்
அதனை ஆய்ந்து பாராமல்
உன்னைப் போன்ற அறிவிலிகள்
உடனே ஏற்றுப் போற்றிடுவர் (2)

சங்க காலத் தமிழ்நூல்கள்
தாயை அன்னை ஆயென்றே
எங்கும் பேசக் காண்கின்றோம்
ஏனோ அம்மா எனவில்லை
இங்கே இருப்போர் கைதட்டி
ஏற்பர் எதிர்க்கார் எனுந்துணிவால்
அங்கே இருந்து வருபவர்கள்
ஆராய் வின்றிப் பேசிடுவர் (3)

அன்னை தமிழில் எத்தனையோ
அரிய நூல்கள் இருந்தாலும்
தன்னந் தனியாய்த் தமிழியங்கும்
சால்பு சங்க நூல்காட்டும்
பின்னே எழுந்த நூலிலெலலாம்
பெருக வடசொல் கிடப்பதனுல்
அன்னை தமிழாள் தனித்தியங்கும்
ஆற்றல் இல்லாள் என்கின்ருர் (4)

அன்னை தமிழின் ஆற்றலினை
அறியார் இவர்போல் சிலரிருப்பின்
மன்னு தமிழின் மாட்சியினை
மாநி லத்தில் மறைத்திடுவர்
என்னே தமிழா உன்மொழியை
ஏனோ அறியா திருக்கின்ருய்
இன்னே தமிழா எழுந்திடடா
இனிய தமிழைக் கற்றிடடா (5)

சும்மா இருந்து கைகொட்டி
சோம்பல் முறிக்கும் தமிழ்மகனே
பம்மாத் தின்று போடுபவர்
பல்கிப் பெருகி விட்டாரே
அம்மா தமிழ்ச்சொல் என்றுரைக்கும்
ஆய்வு சிறிதும் இல்லாதார்
அம்மே தமிழென் றுரைத்தாலும்
அதிலோர் விருப்பும் இல்லையடா (6)

## பாட்டி பாட்டி கதைசொல்லு

(வெண் செந்துறை)

பாட்டி பாட்டி கதைசொல்லு
பண்டைத் தமிழர் கதைசொல்லு
கேட்டு நாங்கள் பயனுறவே
கெதியாய் சொல்லுன் கதையெல்லாம் (1)

பாட்டைக் காத்த பாவலர்கள்
பண்ணைக் காத்து நின்றதொடு
நாட்டைக் காத்த மன்னர்களை
நல்வழி செய்த கதைசொல்லு (2)

கூட்டிச் சங்கம் புலவரொடு
கூட இருந்து கொற்றவரும்
நாட்டில் தமிழை வளர்த்தகதை
நவின்ருல் நாங்கள் பயனுறுவோம் (3)

கோட்டை மதில்கள் கொத்தளங்கள்
கொடிகள் படைகள் முரசமொடு
நாட்டைக் காத்த மன்னர்கதை
நவின்ருல் நாங்கள் பயனுறுவோம் (4)

ஈட்டி குத்து வாளென்று
எவற்றைக் கண்டும் அஞ்சாமல்
நாட்டைக் காத்த வீரர்கதை
நவின்ருல் நாங்கள் பயனுறுவோம் (5)

வெட்டி வீழ்த்தி எதிரிகளை
வெற்றிக் களிப்பில் மிதந்தனரா
தொட்டு நக்கி சுவைத்தவர்கால்
தூக்கித் தோளில் சுமந்தனரா (6)

வீட்டைக் காத்த பெண்மணிகள்
வீரஞ் செறிந்த கதைசொல்லி
நாட்டைக் காக்கப் புதல்வர்களை
நல்வழி செய்த கதைசொல்லு (7)

போரிற் கணவன் இறந்ததுமே
புதல்வன் தனையும் களமனுப்பி
வீரம் வளர்த்த பெண்டிர்கதை
விரிவாய்ச் சொல்லு கேட்டிடுவோம் (8)

வீரம் காதல் இரண்டையுமே
விரும்பிப் போற்றி வாழ்ந்ததமிழ்த்
தீரர் அறத்தின் வழிநின்ற
திறத்தைச் சொல்லு கேட்டிடுவோம் (9)

பந்தம் பிடித்து பல்காட்டி
பதவி உயர்வு பெறுவதற்காய்
சொந்த மனையை கொடுக்கின்ற
சோதாப் பயல்கள் இருந்தனரா (10)

நாட்டில் மொழியில் இனமதனில்
நமது முன்னோர் பற்றின்றி
வீட்டை விட்டு வெகுதொலைவில்
வேலை தேடிச் சென்றனரா (11)

சூட்டும் கோட்டும் வருமுன்னர்த்
தொல்லைத் தமிழர் வாழ்ந்தகதை
கேட்டால் எம்மோர் உள்ளங்கள்
கிளர்ச்சி கொள்ளல் கூடுமன்றோ (12)

காட்டை அழித்து கமக்காரர்
கழனி செய்து வளம்பெருக்கி
நாட்டைச் செழிக்க வைத்தகதை
நவின்றால் நாங்கள் பயனுறுவோம் (13)

நிலந்தான் கொடுக்க பெற்றனரா
நிலத்தை வருத்தி எடுத்தனரா
நலமாய்ப் பயிர்கள் விளைந்தனவா
நாசம் ஏதும் நிகழ்ந்தனவா (14)

விளைவை ஏனை மக்களுடன்
விரும்பிப் பகிர்ந்து நுகர்ந்தனரா
களஞ்சி யத்தில் பதுக்கிவைத்து
கள்ளச் சந்தையில் விற்றனரா (15)

நாட்டில் உழவர் விளைத்தவற்றை
நாலு திக்கும் கொண்டுவிற்று
நாட்டின் செல்வம் பெருக்கிவிட்ட
நமது வணிகர் கதைசொல்லு (16)

பொருளில் வேற்றுப் பொருள்கலந்தும்
பொருளின் அளவைக் குறைத்துவிற்றும்
பொருளை விரைவில் ஈட்டுதற்கு
புன்மைச் செயல்கள் புரிந்தனரா (17)

நாட்டு மக்கள் நலனதனில்
நாட்டம் இன்றி சுரண்டியவர்
தேட்டம் யாவும் செழிப்புற்ற
செல்வர் அன்றும் இருந்தனரா (18)

மான உணர்வு சிறிதுமின்றி
மனத்தின் வழியே செல்கின்ற
ஈனப் பிறப்பாய் இளையோர்கள்
இருந்த நாளும் இருந்ததுவோ

நாட்டில் மொழியில் இனமதனில்
நாட்டம் இன்றி நாள்முழுதும்
ரோட்டுச் சுற்றும் இளையோர்கள்
தொல்லை நாளில் இருந்தனரா (20)

தொழிலே இல்லா இளையோர்கள்
சோக்காய் உடுத்து பொருசாக
பழிக்கஞ் சாமல் பாவங்கள்
பலவுஞ் செய்து திரிந்தனரா (21)

அலியோ ஆணோ பெண்ணென்
றறிய முடியாப் பாவனையால்
பொலியும் இற்றை இளையோர்போல்
போலி மக்கள் இருந்தனரா (22)

மாட்டை புலியை யானையினை
மடக்கி வீரம் காட்டியன்றி
கேட்டு டொனேஷன் சீதனத்தை
கீழாய்ப் பெண்ணைக் கொண்டனரா (23)

காதல் மணத்தை இழிவாகக்
கருதி பெற்றோர் உற்றவர்கள்
மோதல் செய்து முடிவுசெயும்
முறைகள் மணத்தில் இருந்தனவா (24)

கன்னிப் பெண்கள் காளையரை
களவில் கூடி கருத்தரியா
தின்பம் துய்க்க வகைசெய்யும்
ஏதும் வழிகள் இருந்தனவா (25)

காதல் செய்து மணந்தவனைக்
கைவிட் டின்னோர் காளையுடன்
காதல் உறவு பூணுகின்ற
கயமைக் குணத்தர் இருந்தனரா (26)

காதல் செய்து களவினிலே
கலந்து பழகி பலரறிய
வாது செய்து வம்புசெய்து
வருந்திப் பிரிவோர் இருந்தனரா (27)

பணத்தைப் பட்டம் பதவியினை
பார்த்துக் காதல் செய்துபினர்க்
குணச் [illegible] வெறுத்துக் கோடேறி
[illegible]யும் குடும்பம் இருந்ததுவோ (28)

காதல் கணவன் இறந்தபினர்க்
கடிதில் வேறோர் ஆடவனைக்
காதல் செய்து மணமுடிக்கும்
காரி கையரும் இருந்தனரா (29)

கற்பைப் பெரிதாய் எண்ணினரா
காசைப் பெரிதாய் எண்ணினரா
இற்றைப் பெண்கள் அறிந்திடற்கு
இதையுஞ் சொல்லி வைத்திடுவாய் (30)

தாலி கூறை சீதனங்கள்
தரகர் இல்லா முன்னுளில்
ஏழைக் குமர்கள் மணமுடியா
திருந்து துயரப் பட்டனரா (31)

இளைய வயதில் மணமுடித்து
இன்பம் பெருகத் துய்த்தனரா
தலையில் நரைகள் விழுவரையும்
தலையின் விதியென் றிருந்தனரா (32)

சாதி குலங்கள் கோத்திரங்கள்
சமய குறிப்புச் சாத்திரங்கள்
ஏதும் பாரா தெதிர்கொண்டோர்
இணைந்து மணந்த முறைசொல்லு (33)

புலியைக் கொன்று பல்பிடுங்கி
புதல்வர் கையில் தொங்கவிட்ட
வலிமைக் குறியாம் தாலியது
மணத்தில் புகுந்த கதைசொல்லு (34)

இன்று மணநாள் பெண்கழுத்தில்
ஏறும் மங்கல அணியாக
என்று வழக்காய் மாறியதோ
எவர்தாம் எமக்குள் புகுத்தினரோ (35)

பார்ப்பான் குலைத்த நாள்முதலாய்
பரங்கி சிதைத்த நாள்வரையும்
கீர்த்தி குன்றி எம்மவர்கள்
கீழ்மை யுற்ற கதைசொல்லு (36)

## உயிரியும் ஒலியும்

(குறள்வெண் செந்துறை)

மயிலே மயிலே அகவாதே
மைனு நீயும் கதையாதே
குயிலே குயிலே கூவாதே
குழந்தைச் செல்வம் தூங்குகிறுன் (1)

நாயே நாயே குரையாதே
நரியே ஊளை யிடாதேநீ
ஈயே ஈயே இரையாதே
எங்கள் செல்வம் தூங்குகிறான். (2)

கிளியே கிளியே பேசாதே
கீச்சி டாதே அணிலேநீ
கழுதை நீயும் கத்தாதே
காதற் செல்வம் தூங்குகிறான் (3)

யாடே யாடே கத்தாதே
ஆனை நீயும் பிளிறாதே
மாடே மாடே கதறாதே
மதலைச் செல்வம் தூங்குகிறான் (4)

வண்டே வண்டே முரலாதே
வாத்தே நீயும் கத்தாதே
மண்டூ கம்மே கத்தாதே
மழலைச் செல்வம் தூங்குகிறான் (5)

புலியே புலியே உறுமாதே
பூனை நீயும் சீறாதே
எலியே எலியே கீச்சிடாதே
எங்கள் செல்வம் தூங்குகிறான் (6)

பாம்பே பாம்பே சீறாதே
பல்லி நீயும் சொல்லாதே
ஆந்தை நீயும் அலறாதே
அன்புச் செல்வம் தூங்குகிறான் (7)

கோழி கொக்க ரிக்காதே
குதிரை நீயும் கனைக்காதே
ஆளி நீயும் முழங்காதே
அழகுச் செல்வம் தூங்குகிறான் (8)

கரடி கரடி கத்தாதே
காகம் நீயும் கரையாதே
குரங்கே குரங்கே கீச்சிடாதே
குழந்தைச் செல்வம் தூங்குகிறான் (9)

சிறுத்தை நீயும் சீறாதே
சேவல் நீயும் கூவாதே
புறாவே குறுகு றுக்காதே
புதல்வன் கொஞ்சம் தூங்கட்டும் (10)

மண்ணில் எல்லாம் உறங்குதடா
மதலைச் செல்வா உறங்கிடடா
கண்ணின் மணியே உறங்கிடடா
காதல் மைந்நா உறங்கிடடா (11)

## தன்மானம் உனக்குண்டோடா

(எண்சீர் விருத்தம்)

தமிழினம்போற் பழம்பெருமை பேசிப் பேசி
தரணியிலே தாழ்ந்தவினம் ஏதுமுண்டோ
இமிழ்கடல்சூ ழிப்புவிவாழ் மொழிக ளுள்ளே
இனியமொழி தொன்மைமொழி
தமிழே என்றும்
அமிழ்தனைய அம்மொழிக்கீ டில்லை இந்த
அவனியிலே எம்மொழியும் என்றுரைத்து
தமக்குள்ளே தருக்குற்ற தன்றி வாழ்வில்
தமிழினது ஏற்றத்துக் கெதுசெய் ததுவோ

தன்னுழைப்பின் ஒருபகுதி தமிழி தழ்கள்
சஞ்சிகைகள் தமிழ்நூல்கள் வாங்கு தற்கே
என்றொதுக்கி வைத்தானு ஓய்வுப் போதை
இன்தமிழ்நூல் படித்தற்கென் றொதுக்கினனு
தன்னரிய முயற்சியினுல் தான்ப டித்த
தமிழ்நூலை இலவசமாய் மற்ற வர்க்கு
தன்னெழிந்த வேளைகளில் கற்பித் தானு
தமிழ்வளர எதுசெய்தான் தன்வா ழ்ளில்

தமிழ்மொழியை காத்தற்கோ வளர்ப்ப தற்கோ
தன்னெழிவு நேரத்தை பொருளை ஈயான்
தமிழனெனச் சொல்லுதற்கு தகுதி உண்டோ
தரணியிலே தமிழதன் சிறப்பை இன்று
தமிழரல்லார் போற்றுகின்றூர் தமிழா உன்றன்
தாய்மொழியை ஏனையவர் போற்றும்போது
தமிழனுய நீயதனைப் போற்று திருத்தல்
தகுமோடா தன்மானமுனக்குண் டோடா

## வேலை தேடி.......

(எண்சீர் விருத்தம்)

எள்ளுருண்டை முருங்கைக்காய் கறுத்தக்
கொழும்பான்
இராசவள்ளி புழுக்கொடியல் பனுட்டு
மற்றும்
வெள்ளரிக்காய் பனங்கட்டி வெள்ளைப்
போத்தல்
இரண்டோடு நல்லெண்ணெய்
இரண்டு போத்தல்
வள்ளிசாக பெட்டியினில் போட்டுக் கட்டி
மற்றவர்க்குத் தெரியாமல் இரவு வேளை
வெள்ளவத்தை வீட்டுக்கு கொண்டு சென்றே
எம்பியிடம் நான்தந்த தென்று சொல்லு

எப்போது நான்வருவேன் என்று கேட்டால்
இரண்டொருநாள் சுணங்குமென
சொல்லி விட்டு
தப்பாமல் தன்வேலை பார்க்கச் சொன்னார்
தனக்காக காத்திருக்க வேண்டா என்றார்
இப்போதைக் கிதைவைத்துக்
கொள்ளச் சொன்னார்
என்றிந்த என்வலப்பை கையில்
கொடுத்தால்
மூப்போதும் என்னினைவே முந்தி நிற்க
முடித்திடுவர் என்வேலை
முதலாய் என்பேன்

## சரணையற்ற தமிழன்

(எண் சீர் விருத்தம்)

சோற்றுக்கு வழியுண்டேல் சொல்லு தம்பி
சுரணையற்ற தமிழன்நான் ஆட்சி பீடம்
வீற்றிருப்போர் யாரானால் என்ன வயிறு
வீங்குவரை சோறிட்டால் போதும் என்றன்
தோற்பையில் சுருக்குவிழா திருக்க ஏதும்
தொழில்செய்யா திருந்துணவு சுவைக்க
யாரும்
நேற்றுவரை வழிசொல்ல வில்லை இன்று
நீயேதோ உரிமையென உளறு கின்றாய் (1)

காணிபூமி எங்கேனும் இருந்தால் சொல்லு
காசுகொடுத் திடாக எனதே ஆக்கி
பேணியென்றன் பிள்ளைகட்கு பேர ருக்கு
பெருமையொடு எழுதிவைப்பேன்
பெண்கொடுக்க
கோணமல் எல்லோரும் வருவர் குலமோ
கோத்திரமோ சாதகமோ கூர்ந்து பார்த்து
வீணுக நேரத்தை விரையஞ் செய்யார்
விரைவினிலே மணமுடிக்க விரும்பு வாரே (2)

பணஞ்சேர்க்க வழியொன்று சொல்லு தம்பி
பார்மீது எத்தொழிலும் செய்ய வல்லேன்
குணதிசையா குடதிசையா வடக்கா தெற்கா
குவலயத்தின் எத்திசையும் செல்ல வல்லேன்
கணமேனும் ஓய்வின்றிக் கடுமு ழைப்பால்
காசினியில் உயர்ந்தவன்நான் கறக றப்போ
முணுமுணுப்போ ஏதுமின்றி முழுநாள்
உழைப்பேன்
முதலாளி உதைத்தாலும் முகஞ்சுளிக்கேன் (3)

மற்றவரின் மனம்நோகும் என்னும் எண்ணம்
மருந்தளவும் எனக்கில்லை மாநி லத்தைப்
பற்றியொரு கவலையில்லை பதவி காக்க
பசைவைப்பேன் பல்லிளிப்பேன் பந்தம்
பிடிப்பேன்
விற்றிடுவேன் மானத்தை இனத்தைமொழியை
வீணர்போல் உரிமையொன்றும் கேட்க
மாட்டேன்
உற்றவரை ஊரவரை மதிக்க மாட்டேன்
உயர்த்திடஎன் பதவியினை எதுவுஞ்
செய்வேன் (4)

## மானமுள்ள தமிழன்

(செந்துறை)

அடியும் உதையும் பட்டுள்ளம்
அலக்கண் உற்று அஞ்சியஞ்சி
மடிவ தனிலும் தாய்நாட்டின்
மண்ணுக் காக மாண்டிடுவான்

# எவன் தமிழன்

(அறுசீர் விருத்தம்)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

தன்னினத்தின் இன்னலினை
தன்னகத்தே கொள்ளாமல்
தன்வாழ் நாளை
தன்னலனைப் பெருக்குதற்கே
சாம்வரையும் கழிக்கிறானே
தமிழன் இவனா
தன்னினத்தின் இன்னலினை
தன்னுயிரைத் தந்தேனும்
தவிர்ப்ப தற்கு
தன்னறிய போதெல்லாம்
தளராது உழைக்கிறானே
இவனா தமிழன் (1)

பொன்னனைய போதையெல்லாம்
பொருள்தேடும் முயற்சியிலே
புவியின் பரப்பை
தன்முதுமைப் போதினிலும்
தளர்வின்றி அளக்கிறானே
தமிழன் இவனா
பொன்பொருளைப் புறத்தொதுக்கி
போதெல்லாம் உரிமைக்கு
போரா டற்கே
என்றுறுதி பூண்டுநின்று
இறுதிவரை உழைக்கிறானே
இவனா தமிழன் (2)

மறைந்தும்
மறையாதோர்

# ஆதி சங்கரன்

(அறுசீர் விருத்தம்)

சருவமும் பிரம்மம் என்று
சாற்றிடு வேத உண்மை
அருவழக் குற்ற காலை
அவனியில் தோன்றி அதனை
பெருவழக் குறநீ செய்த
பற்றியை உணரும் உள்ளத்
துருவொ டுறைவாய் என்றும்
விய்யவா சங்கராநீ

(காசிவசி—சிவாயவாசி)

## ஆநந்த குமாரசாமி
(அறுசீர் விருத்தம்)

அலைகடல் அளாவும் ஈழம்
அந்நியர் ஆட்சிப் பட்டு
கலைவளம் குன்றி ஈந்த
கையறு காட்சி கண்டு
நிலைகுலைந் துள்ளம் நொந்து
நீடுயர் உற்று நந்தன்
கலையதற் குயிர்கொ டுக்க
கங்கணங் கட்டி ஞனே

## ஞானப்பிரகாசர்
(நேரிசை வெண்பா)

நல்லை நகர்தந்த ஞானப் பிரகாசர்
சொல்லின் பிறப்பைத் துருவியாய்ந்த
—வல்லாளன்
அன்னை தமிழோ டயன்மொழியும் ஆய்ந்துதமிழ்
முன்மை நிறுவினன் காண்

## கந்த முருகேசன்
(நேரிசை வெண்பா)

கந்த முருகேசன் கன்னித் தமிழ்மொழியின்
அந்தமது கண்ட அரும்புலவன் – சந்ததமும்
பண்டிதற்கும் வித்துவாற்கும் பட்டதாரி
மாணவற்கும்
தண்டமிழைத் தந்தான் இனிது

## ஜி. ஜி.
(அறுசீர் விருத்தம்)

இமயம் வரையும் எம்புகழை
எடுத்துச் சென்றூர் முடிமன்னர்
இமயம் கடந்தும் எம்புகழை
எடுத்துச் சென்றுய் பொன்ஞநீ
தமிழன் புகழை மீண்டுமிந்தத்
தரணி எங்கும் பரப்புதற்கே
சமயம் நெருங்கி வருகையிலே
தலைவா பொன்ஞ பிரிந்தாயே

## விபுலானந்தன்

(எண்சீர் விருத்தம்)

மட்டுநகர் ஈன்றெடுத்த மாதவத்தோன்
வண்டமிழின் கரைகண்டு மண்ணவர்க்குக்
கட்டுரைத்த வல்லாளன் கவிஞன் மேலைக்
கலைகளொடு விஞ்ஞானம் யாவும் கற்று
மட்டிலின்ப இசையாய்ந்து யாழ்நூல் ஈந்து
வான்புகழ்கொள் மறைஞானி என்றும் கற்றோர்
மட்டுமன்றி மற்றவரும் வாழ்த்தும் எங்கள்
மாவிபுலா நந்தனிசை வாழி நீடே

## நேரு

(அறுசீர் விருத்தம்)

மனிதனை மனித னாக
மாநில மெங்கும் காண
மணியிரு பத்து நான்கும்
மாதமீ ராறுந் தன்னந்
தனியனாய்ச் சாவ ரையும்
சளைத்திடா துழைத்தாய் நேரு
இனிநமக் குன்றன் சேவை
இல்லையாம் என்னே என்னே (1)

(வேறு)

தேசிய உணர்வைத் தேயவர்க் கூட்டி
தேசசு தந்திரம் பெற்றாய்
மாசிலாச் சேவை செய்ததால் மக்கள்
மனத்தினில் நிலையிடம் பெற்றாய்
பேசரும் உன்றன் பெருமையை மேலும்
பெருக்கிடு வகையினீ வாழ்ந்தாய்
தேசுடை சோதி செறிந்திட வாழ்ந்த
தீதிலா மணியென வாழ்ந்தாய் (2)

சுதந்திரம் பெற்ற மக்களின் வாழ்வில்
சுபிட்சமேன் மேலுமோங் கிடவே
இதந்தரு வாழ்வை இழந்திடர் மல்கும்
ஏழ்மையை ஏற்றுநீ வாழ்ந்தாய்
சுதந்திர இந்து நாட்டினை மேலைச்
சூழ்ச்சியர் தம்வலைப் படுத்த
விதவித மாக விரித்தனர் வலையை
வீழநீ விட்டனை யன்றே (3)

(வேறு)

போரினால் யார்க்கும் பயனிலை யென்னும்
பொன்மொழி தனையுளங் கொண்டு
போரினை யொழிக்க சோஷலிஸ்ட் நாடு
புரிந்திடும் பணியினைப் போற்றி
வாரிவ ழங்கிய வாழ்த்துரை கண்டு
வல்லர சாகவி ளங்கும்
ஓரிரு நாடு ஒறுத்துனக் கீந்த
உதவியை நிறுத்திய போதும்
சீரிய வந்நற் செந்நெறி யாண்டும்
செறிந்திட வேண்டுமென் றெண்ணி
பாரினர் போற்றும் பஞ்சசீ லத்தை
பயந்துநீ பரவிடச் செய்த
சீரினை யெண்ணி சிந்தனை யுள்ளம்
சிந்தனை செய்திடு வேளை
காரிருள் தன்னைக் கவித்துநீ நம்மேல்
கடிதினில் மறைந்தனை என்னே. (4)

## நடேசபிள்ளை

(எண்சீர் விருத்தம்)

ஆங்கிலத்தை அந்தமிழை ஆரியத்தை
ஆய்ந்தறிந்த அரும்புலவன் அரசில் வல்லான்
தீங்குபிறர்க் கெண்ணாத சிந்தை யாளன்
திறமைமிகு செயல்வீரன் செஞ்சொற்
கொண்டல்
ஓங்குபுகழ் கலைவிருத்தி உளத்திருத்தி
ஓயாது உழைத்தபெம்மான் நடேசப்பேரான்
நீங்கிவிட்டான் நெடும்பணிகள் நிலைக்க விட்டே
நீளுலகி லவைதொடர்ந்து நினைவு கூர்வோம்

(காசிவசி —சிவாயவசி)

## ஜீவா

(அறுசீர் விருத்தம்)

பண்டைய நூல்கள் யாவும்
பழுதறக் கற்றுத் தேர்ந்து
தண்டமிழ் வளஞ்சி றக்கத்
தமிழ்ப்பணி நாளு மாற்றித்
தொண்டனாய் தொழில்செய் மக்கள்
தோழனாய் வாழ்நா ளெல்லாம்
பண்புடன் வாழ்ந்த ஜீவா
பண்புளம் மறவா துன்னை (1)

கவிவளஞ் செறிந்த கம்ப
காவிய நயமு ரைக்கச்
செவிமடுத் தின்ப முற்றார்
தேர்ந்தநற் புலவ ரென்றால்
புவிமிசை நின்போற் செஞ்சொற்
புலவர்கள் தோன்று மட்டும்
கவிநயம் கண்டு வக்கும்
கவியுளம் மறவா துன்னை (2)

கோடையின் இடியோ முரட்டுக்
கொம்பனின் பிளிறல் தாமோ
வாடைமேற் சுமந்து வந்த
வல்லரி முழக்கோ என்ன
மேடைமுன் இருப்போர் வியந்து
மெய்ம்மயிர் சிலிர்க்க நீயோ
மேடையில் முழங்கு வாயே
மேல்வர் மறவா ருன்னை (3)

(மணிவர்ணன் — தேசாபிமானி 8 - 2 - 64)

## பெரியார் ஈ. வே. ரா.

(எண்சீர் விருத்தம்)

பகுத்தறிவுக் கொவ்வாத பார்ப்பனீயப்
படுமூடக் கொள்கைகளின் பிடியிருந்து
விடுவிக்க திராவிடரை துணிச்சலோடு
இறுதிவரை போராட்டம் நடத்தி வந்த
பகுத்தறிவுத் தந்தையினை தமிழர் வாழ்வின்
பகலவனை ஈ. வே. ரா. பெரியார் தம்மை
நெடும்புவியில் தமிழ்மக்கள் வாழும்வரையும்
நெஞ்சினிலே நிறுத்திவைத்து நினைவுகூர்வர்

## பேராசிரியர் கணபதிப்பிள்ளை
(அறுசீர் விருத்தம்)

அந்தமிழை ஆங்கிலத்தை
ஆரியத்தை பாளியினை
ஆய்ந்த றிந்து
முந்துதமிழ் நூன்முறையை
மொழியியல்பை நுனித்தறிந்து
மொழியை வளர்த்தோன்
நந்தமிழர் வாய்மொழியில்
கவிதையினை காதையினை
நாட கத்தை
தந்தமுதற் பேராசான்
கணபதிப் பிள்ளையினை
தமிழர் மறவோம்.

## பாரதிதாசன்
(அறுசீர் விருத்தம்)

பைந்தமிழின் இன்சுவையை
பழந்தமிழன் வீரமதை
பார்ப்ப னீயப்
புன்மையினை திராவிடத்தின்
புகழ்பூத்த முன்மையினை
புதிய உலகின்
முன்னேற்றக் கருத்துகளை
முத்துமுத்தாய் எடுத்துரைத்து
முடங்கிக் கிடந்த
தென்னவரை முடுக்கிவிட்ட
செந்தமிழப் பாவேந்தே
சென்ற தெங்கோ

## பெஸ்கி
(நேரிசை வெண்பா)

தேம்பா வணியெனுந் தீந்தமிழ் காப்பியத்தை
ஈந்து தமிழில் இடம்பிடித்த — ஓங்குபுகழ்
இத்தாலி நாட்டின் இளந்துறவி பெஸ்கியினை
எத்தாலும் நெஞ்சே நினை

## அறிஞர் அண்ணா
(பஃறொடை வெண்பா)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

பழகு தமிழில் பலரும் அறிய
எளிய இனிய நடையில் எழுதியும்
பேசியும் மூட இருளை யகற்றியும்
புத்தம் புதிய கருத்து பரப்பியும்
தாழ்ந்து கிடந்த தமிழர் சமூகத்தைத்
தட்டி எழுப்பி தலைநிமிர வைத்து
தமிழன் வதியும் இடமெலாம் நின்புகழ்
நின்று நிலைத்திட எங்குநீ சென்றாய்
அறியத் தருவாயோ அண்ணா

## திரு. வி. க.
(எண்சீர் விருத்தம்)

மன்பதையின் சிறுமைஎலாம் ஒழியவேண்டின்
மாக்சிசமும் காந்தியமும் கலந்த ஒன்றே
நன்மருந்தென் றெடுத்துரைத்து நாளும்போதும்
நாட்டுநலன் ஒன்றனையே கருத்திற்கொண்டு
செந்தமிழப் பேச்சாலும் எழுத்தி னாலும்
சிவநெறியும் செந்தமிழும் பரப்பி நின்ற
செம்மலினை தொழிலாளர் தோழ னை
திருவிகவை சிந்தையினி லிருத்து வோமே

## பிள்ளை
(நேரிசை வெண்பா)

பிள்ளைத் தமிழ்போற் பிரபந்தம் பற்பலவாற்
தெள்ளுதமிழ்ப் பாவைச் சிறக்கவைத்தான்—
பிள்ளையாம்
மீனாட்சி சுந்தரன்போல்மீண்டும் பிறந்துதமிழ்த்
தேனூறு பாயவைப்பார் யார்

## சாமிநாதையர்
(நேரிசை வெண்பா)

ஏட்டுப் பிரதிகளைத் தேடி எடுத்துவந்து
பாட்டுந் தொகையும் பதம்பிரித்து—நாட்டில்
முதலில் பதிப்பித்த சாமிநா தையர்
இதயத்தில் வாழ்வரே என்றும்

## மறைமலையடிகள்
(எழுசீர் விருத்தம்)

ஆரியக் கலப்பால் அழிந்துகொண் டிருந்த
அருந்தமிழ் அன்னையைக் காக்க
சீரிய பணிகள் செய்தமா மலையார்
எழுத்திலும் பேச்சிலும் தமிழில்
ஆரியக் கலப்புச் சிறிதுமே இன்றி
தமிழ்தனித் தியங்குமென் றுணர்த்த
ஆருமே எளிதில் அறிந்திடு வண்ணம்
தனித்தமிழ் நூல்பல தந்தார்

## உமறுப் புலவர்
(நேரிசை வெண்பா)

செஞ்சொற் பொருணயங்கள் சேர்ந்து
பொலிந்திலங்கும்
செந்தமிழக் காப்பியமாம் சீருவை—தந்த
உமறுப் புலவனுக்கு ஒப்பாகச் சொல்ல
தமிழ்ப்புலவர் வேறுளரோ சாற்று

## சேகுதம்பிப் பாவலர்
(நேரிசை வெண்பா)

நாவலர் என்றதுமே நல்லைநகர் ஆறுமுக
நாவலரே வந்துநிற்பர் நம்முன்னே — பூவிதில்
பாவலர் என்றுற் சதாவதானி சேகுதம்பிப்
பாவலரே வந்துநிற் பார்

## தாவூத் ஷா
(அறுசீர் விருத்தம்)

பழந்தமிழ் நூலிற் தேறி
பண்புடன் தமிழும் தீனும்
தழைத்திட தாருஸ் சலாமென்
சஞ்சிகை வாயி லாக
உழைத்தபா தாவூத் ஷாவை
உயர்தமிழ்ப் புலவர் உலகம்
உளத்தினில் இருத்தி வைத்துப்
போற்றிடும் மறவா தென்றும்

பொது

## ஓய்வு

(அறுசீர் விருத்தம்)

ஒருமணி நேர ஓய்வீந்
துலகிடைப் போய்வா என்றே
உரைத்தனன் இறைவன் உடனே
ஓடியே வந்தேன் அந்த
அருமணி தனையாம் எங்ஙன்
கழித்திடல் வேண்டும் என்றே
மரித்தவென் மனையாள் கேட்டு
வந்தனள் என்னி டத்தே (1)

அன்றுபோல் இன்றுஞ் சற்றே
அடிபிடிப் படுதல் தானே
என்றியான் இயம்பு முன்னே
எழுந்தது பூசல் எம்முள்
கொன்றதை அமைதி நாட்டக்
கொண்டனன் உறுதி அந்தோ
சென்றுதேய்ந் திற்ற தந்தச்
சின்மணிப் போத தற்குள் (2)

(தழுவல்)

## சிவ நடனம்

(அறுசீர் விருத்தம்)

கைப்பறை முழக்கஞ் செய்யக்
காலணி யதிர்ந்தொ லிப்பத்
தப்பிடா துளக்கு றிப்பைத்
தகுவழி விழியு ணர்த்த
முப்புரம் எரித்த பின்றை
உமையினை ஒக்கல் தாங்கி
ஒப்பிலாக் கொட்டிச் சேதம்
உவகையால் ஆடி ஞனே (1)

ஆடிய காலை யன்னை
உமையவள் பூண்டி ருந்த
சூடகம் துளங்க வில்லைத்
துணைமுலை குலுங்க வில்லைப்
பாடகம் அனுங்க வில்லைப்
பாதணி சிணுங்க வில்லைச்
சூடிய பூக்கள் கூட
உதிர்ந்திட வில்லை என்னே (2)

# நானே இந்தியா
(எழுசீர் விருத்தம்)

என்னுட லந்தான் இந்திய பூமி
என்னடி இலங்கிடு குமரி
என்றலை இமயம் இதிலிருந் திழியும்
பிரமபுத் திரவொடு கங்கை
என்னிடுப் பென்பே விந்திய மலைகள்
என்னிடக் கால்கொற மண்டல்
என்வலக் காலே எழின்மல பாராய்
இந்தியா முழுவதும் நானே. (1)

என்னிரு கைகள் இந்திய நாட்டின்
கிழக்குமேற் காயமைந் திடவே
மன்னுயிர் தம்மைத் தழுவுதற் கவற்றை
யகலவே விரித்திடு கின்றேன்
என்னுடை யன்போ இருநிலந் தழுவும்
என்னுயிர் மன்னுயிர் கலக்கும்
என்னுடல் வானப் பெருவெளி நோக்கு
திவ்வுடல் விந்தைதான் என்னே (2)

நானடக் குங்கால் இந்திய நாடே
நடப்பதாய் உணர்ந்திடு கின்றேன்
நானவி லுங்கால் இந்திய நாடே
நவில்வதாய் உணர்ந்திடு கின்றேன்
நானுயிர்த் திடும்போ திந்திய நாடே
யுயிர்ப்பதாய் உணர்ந்திடு கின்றேன்
நானயன் நானே இந்தியா நானே
சங்கரன் எனவுணர்ந் திடுவீர். (3)

(வேறு)

இங்ஙன் உணர்தலே உண்மையான நாட்டுப்பற்(று)
இங்ஙன் உணர்தல் நடைமுறை வேதாந்தம்
இங்ஙன் உரைத்த இராமதீர்த் தன்னுரை
தங்குக யாவருள் ளத்தும். (4)

(தழுவல்—காசிவசி—குங்குமம் ஜுன் 1969)

# உயிரினிப் பிரியேன்

(அறுசீர் விருத்தம்)

போர்க்களத் திறந்த செம்மல்
புகழுடல் தனைச்சு மந்து
சேர்த்தனர் அவனிற் கொண்டு
செருக்களத் திருந்து சில்லோர்
பார்த்தவண் நின்றோர் கண்கள்
பனித்தன எனினும் அன்னான்
ஆர்த்தவள் மட்டுஞ் சற்றும்
அழுதிடா ததிர்ந்து நின்றாள் (1)

நின்றவள் நிலைகண் ணுற்றோர்
நெடிதிவள் அழுதல் வேண்டும்
இன்றெனில் இவளு யிர்க்கும்
இன்னலே நேரும் என்றே
அன்னவள் மனம்க ரைக்க
அவன்புகழ் பண்பு வீரம்
இன்னலன் யாவுஞ் சொன்னார்
எதற்குமே அசைந்தா ளல்லள் (2)

மன்னவன் முகங்கண் ணுற்றால்
மனங்கரைந் தழுதல் கூடும்
என்றெணி ஆண்டி ருந்த
இளமகள் ஒருத்தி மெள்ள
சென்றவன் முகம றைத்த
சீலையைச் சிறிது நீக்கி
நின்றனள் எனினும் மங்கை
நெஞ்சமோ கரைய வில்லை (3)

கண்டவோர் முதிய தாதி
கடுகியே அவன்சி றாரைக்
கொண்டுவந் தவளின் கையிற்
கொடுத்ததும் கோவென் றழுது
கண்களில் நீர்பெ ருக்கிக்
கண்மணீ காதல் மைந்த
உன்றனுக் காக வாழ்வேன்
உயிரினிப் பிரியேன் என்றாள். (4)

(தழுவல்)

## நினைவிருக்கு

(எண்சீர் விருத்தம்)

நினைவிருக்கு நினைவிருக்கு நினைவி ருக்கு
நீங்கள்செய்த குறும்பியாவும் நினைவி ருக்கு
மனையருகே மணல்வீடு கட்டி முன்னர்
மகிழ்ந்துவிளை யாடியநாள் தொட்டு பின்னர்ப்
பனையருகே பைம்புல்லுத் தரையில் ஓர்நாள்
பகலென்ன பால்நிலவு காயும் வேளை
எனையணைத்து ஈந்தமுத்தம் எல்லாம் இன்னும்
நினைவிருக்கு நினைவிருக்கு நினைவி ருக்கு

## வீண்

(நேரிசை வெண்பா)

உள்ளத் துணர்வுகளைத் தெள்ளத் தெளிவாக
கள்ளக் கடைவிழிகள் காட்டுகையில்—கள்ளிநீ
மெள்ள இதழ்விரித்து மென்மைக் குரலெடுத்து
வீள்ள முயல்வதெல்லாம் வீண்.

## காதல் முகம்

(எண்சீர் விருத்தம்)

ஆதவன்கீழ் வானத்தை விட்டு மெள்ள
அடிபெயர்த்து வந்ததுகண் டானந் தந்தாற்
பூதலத்தாள் புன்முறுவல் முகத்துத் தாங்கிப்
புளகமுறும் காட்சிகண்ட போதெல் லாமுன்
சீதமதிச் செம்முகத்துச் செவ்வாய் அலர்ந்து
சிந்துநகை ஒளிவெள்ளத் தமிழ்ந்தி ருக்கும்
காதல்முகம் கண்டுமனங் களிக்கு மென்றால்
கன்னியுனை மறந்திருத்தல் எங்ஙன் சொல்வாய்

## காதலுளம்

(எண்சீர் விருத்தம்)

நிலமுழுது பண்படுத்தி நெல்வி தைத்து
நீரிறைத்து நெற்றிவேர்வை நிலத்துச் சிந்தி
நலன்கெடுக்கும் களைபிடுங்கி நாற்று நட்டு
நாள்முழுதும் பாடுபட்டே ஆவல் மேவ
பலனதனைப் பெறுநாளைப் பார்த்து நிற்கும்
பாடுபடும் பாட்டாளி உள்ளம் போல
கலவியதாம் பெரும்பயனைத் துய்க்கு நாளைக்
காதலுளம் பார்த்திருத்தல் அறிவா யோநீ.

## வருவேனே
(அறுசீர் விருத்தம்)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

சின்னப் பெண்ணாய்த் திரிகையிலே
சீனி மிட்டாய் மிகத்தந்தே
என்னைக் கவர்ந்து சென்றவரே
எங்ஙன் உம்மை மறப்பேனோ
அன்பே அன்றென் அகத்தெழுந்த
ஆசில் உணர்வே ஆக்கையெலாம்
மின்போல் பாவி இன்றென்னை
மிகவும் வதைப்ப தறிவீரோ. (1)

என்றன் எழிலின் ஏற்றத்தை
ஏனோ எடுத்துப் புகல்கின்றீர்
அன்பே அகன்றீர் அப்போதே
ஆழ்ந்த துன்பம் அணைந்திடவே
இன்பும் எழிலும் இணையாக
என்னைப் பிரிந்து சென்றனவே
அன்பே நானும் உடைமையென
அறைதல் வேறு வேண்டுங்கொல்? (2)

மனத்துள் மறைத்து நுமைக்காக்கும்
மாயம் மற்றோர் அறிவாரோ
சினத்துச் சினத்துச் சிடுசிடுத்துச்
சீறி எரிந்து வீழ்கிறனும்
மனத்தில் ஏதோ குறைபாடாம்
மாற்றம் உடலில் தெரிகிறதாம்
அனைத்துங் பேரும் உளறுகிறார்
ஆயும் ஏங்கி அழுகின்றாள் (3)

கண்ணால் சின்னாள் காண்கின்றேன்
கனவில் பன்னாள் பழகியதன்
எண்ணம் தானோ இக்கனவும்
ஏதொன் றெனக்கும் புரியவில்லை
உண்மைக் காதல் இதுதானோ!
உண்டே எனக்கும் அதுபோல
விண்டு சொல்ல முடியாமல்
வீணாய்க் காலம் கழித்திட்டேன். (4)

காளை நீரென் கைப்பிடித்துக்
கடிதில் மணமு டிப்பீரேல்
வேளை தவரு தின்பளித்தே
வெறுமை வாழ்வில் விரட்டிடுவேன்
நாளை நாளை நாளையென
நகர்த்தி நாளைச் செலுத்தாது
வேளை இதுவே வந்தென்றன்
வெம்மை வரைந்து வீட்டிடுவீர் (5)

(மரகதச்செல்வி—மரகதம்)

## உம்முள்ளம் கடிதோ

(அறுசீர் விருத்தம்)

எனக்கும் உள்ளம் இருக்கிறதே
இல்லை என்ருல் உமையெண்ணி
மனத்துப் பளுவைச் சுமந்தென்றும்
வாழ உறுதி கொள்வேனே
மனத்தில் ஐயம் நுழைந்ததனுல்
மாற்றம் என்னிற் காண்கின்றீர்
எனக்கும் உள்ளம் இருக்கிறதே
என்ப தறிந்து தெளிந்திடுவீர் (1)

உங்கள் முகத்தில் இருள்படிந்தால்
ஒளியென் முகத்தில் அகன்றிடுமே
உங்கள் வரவை எதிர்நோக்கி
உள்ளம் ஏங்கித் தவிப்பதனை
சங்கத் தமிழன் அகச்சிறப்பு
சாற்றும் நீரேன் அறியவில்லை
எங்கள் உள்ளத் திண்மையினை
இன்பத் தமிழ்நூல் சாற்றிடுமே. (2)

கண்ணை இமைகள் காப்பதுபோல்
கற்பைக் காத்து நிற்கின்றேன்
உண்ணெக் குருகி உம்நினைவால்
உகுக்கும் கண்ணீர்ப் பெருக்கதனுல்
மண்ணே இளகும் போதன்பே
மனமேன் இளக விலையுமக்கு
கண்ணே அனையீர் உம்முள்ளம்
கடிதோ மண்ணிற் கழறிடுவீர் (3)

# துயரம் வேண்டா

(எண்சீர் விருத்தம்)

கடல்முழுகிக் கண்டெடுத்த முத்தே என்றன்
கற்கண்டே கனிச்சாறே தேனே பாகே
மடல்கள்பல வரைந்தனுப்பி மகிழ வைத்தென்
மனவிருளை இரித்தஒளிர் மணிவி ளக்கே
திடமெனக்குக் குறையவில்லை தீமை செய்யேன்
திருமணம்நான் செய்திடுவேன் ஐயம் வேண்டா
கடலொருகால் வற்றினும்நம் காதல் வற்று
தெனவுரைத்த செய்தியென்றும் மாறு உண்மை

மறைவாகப் புழுவரிக்க மாய்ந்து போகும்
மாமலராய் உன்வாழ்வு மறுக ஒட்டேன்
சிறைவாழ்வில் இருந்துன்னை மீட்டென் உள்ளச்
சிறையினில்வைத் துணர்வூட்டி உயிரும் ஊட்டி
நிறைவான நல்வாழ்வு நான ளிப்பேன்
நீக்கிவிடு நெஞ்சிலுறை துயரம் யாவும்
குறைவாக நானேதுங் கூற வில்லை
குறையார்மீ தென்பதுவுந் தேவை யில்லை (2)

பொங்கிவரும் புனலாலும் புயற்காற் றாலும்
போக்கடித்த பொருள்யாவும் போன பின்பும்
தங்கிநிற்கும் பாறைபோலத் தளர்வில் லாமல்
தாங்கவொண்ணு துயர்நடுவில் வாழ்தல் கண்டு
பொங்கியெழு கின்றதென துளங்க ளிப்பால்
போதருந்திப் புளகமுறும் வண்டு போல
தங்கியிரு சின்னுளில் தாவி வந்து
தஞ்சமுனக் களிக்கின்றேன் துயரம் வேண்டா

காவியத்தில் நாடகத்தில் காதல் என்றால்
கனிந்துள்ளம் மகிழ்ந்துமிக போற்று கின்றார்
பூவிலுறை மக்களிடைக் காதல் என்றால்
புரிந்துபல தடைகளிட்டுத் தூற்று கின்றார்
ஆவிபொருள் உடலனைத்தும் அளித்தும் காதல்
அழியாது காப்பதற்கு துணிவு கொள்வாய்
பூவினிலே பிரிந்துவாழ நேர்ந்தா லும்நாம்
புறவுலகில் ஒன்றுவோம் உறுதி கொள்வாய் (4

(கொக்கூர்கிழான்—தினகரன் 6—5—62)

# வாழ்விழப்பீர்

(எண்சீர் விருத்தம்)

கடல்முழுகிக் கண்டெடுத்த முத்தே என்பர்
கற்கண்டே கனிச்சாறே தேனே என்பர்
மடல்விரித்து மணம்பரப்பும் மலரே என்பர்
மாசறுவெண் திங்களன்ன முகத்தாய் என்பர்
கடலினுந்தம் காதல்நனி பெரிதே என்பர்
காதல்மொழி பலபேசிக் கனிய வைப்பர்
உடலுறவு வைப்பதற்காய் உறுதி சொல்வர்
ஊரறியத் திருமணந்தாம் செய்வ தாக (1)

என்றுதிரு மணஞ்செய்வீர் என்று கேட்பின்
ஏதாவ தொருநாளை எடுத்துச் சொல்வர்
என்றுவரு மோவந்நாள் எனறு நீவிர்
ஏங்கிநிற்க அந்நாளும் வந்து சேரும்
அன்றுறுதி சொல்லியுமை அகன்ற அந்த
அவர்மட்டும் அன்றல்ல அதற்குப் பின்னும்
என்றுமேதான் வரமாட்டார் ஏழை உம்மை
ஏமாற்றித் தவிதவிக்க விட்டுச் செல்வர் (2)

அவர்வருவார் எனவெண்ணி ஆசை மேவ
ஆண்டுபல காத்திருப்பீர் உறுதி யாக
அவர்வரவே மாட்டாரென் றெவர்சொன் னாலும்
அவர்சொல்லை மறுத்துரைப்பீர் மடமை யாலே
நவஉலக வஞ்சகர்தம் நயவு ரையால்
நாணிழந்து நலனிழந்து நாளும் வாட்டும்
கவலையினால் கவினிழந்து கனிவி ழந்து
காலமெலாம் காத்திருந்து வாழ்வி ழப்பீர் (3)

காதைகளில் கவிதைகளில் வாழுங் காதல்
கனவுலகில் வாழுகின்ற கவிக ளுள்ளம்
போதையுறும் போதுகண்ட பொருளே யன்றி
பொருந்திடாதிவ் வுலகியலுக் குணர்வீர் சற்றும்
யாதையினிற் பள்ளியினிற் பணிம னையிற்
பருவவுணர் வெழுச்சியிலே தோன்றுங் காதல்
காதலன்று கலவிவேட் குங் கீழ்மை மிக்க
காமமது கடுகளவும் ஐயம் வேண்டா. (4)

(பதில்—தினகரன்)

# என்னுளம் ஆர்த்தவள்
(எழுசீர் விருத்தம்)

அவனியில் உறையார் அழகிய ருள்ளே
அவட்கிணை யாருமே இல்லை
அவளென துள்ளம் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில்
அவளினு மினியள் ஆருமே இந்த
அயலினில் எனக்கிலை என்பேன்
அவளென துள்ளம் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (1)

அவளது தந்தை கூடைமு டைந்து
அவற்றினைத் திரிந்துவிற் றிடுவான்
அவளது தாயோ ரேந்தைகள் பின்னி
அலைந்துவிற் றரும்பொருள் சேர்ப்பாள்
இவரவள் போலும் எழினிறைப் பெண்ணை
ஈன்றனர் என்பது சாலா
அவளென துள்ளம் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (2)

அவளென தருகே அமர்ந்திடில் எனக்கோ
அலுவல்கள் எதுவுமே ஓடா
தவகொடு மனத்தன் என்னெச மானன்
தடியெடுத் தெனையடித் திடுவான்
அவன்தன தாசை அறும்வரை அடிக்க
அவளினுக் காயதை ஏற்பேன்
அவளென துள்ளம் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (3)

உவப்பினில் என்னை ஆழ்த்திடும் ஓர்நாள்
உளதொரு கிழமையில் அதுவே
நவவுனர் வெழுப்பும் ஞாயிறந் நாளில்
நல்லுடை அணிந்தெழில் தோற்ற
அவளுடன் கூட அளவளாய்க் கொண்டே
ஆர்வமோ டுருலாப் போவேன்
அவளென துள்ளம் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (4)

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

என்னையுங் கோயிற் கென்னெச மானன்
என்றுமே அழைத்துசெல் வானே
என்னவள் சலியை எண்ணிநான் அவனைப்
பிரார்த்தனை வேளையிற் பிரிந்து
சென்றவ ளிடத்தைச் சேர்ந்திடு வேனே
சினந்தவன் ஏசுவன் என்றும்
அன்னவள் என்னுள் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (5)

இன்னொரு தடவை கிறிஸ்மசு வரும்போ
தென்னிடம் பணம்நிறைந் திருக்கும்
அன்னதை ஒளித்துப் பெட்டியில் வைத்தேன்
ஆரமு தனையவட் களிப்பேன்
என்னிடம் இருக்கும் பணம்முழு வதையும்
என்னவட் களித்திடு வேனே
அன்னவள் என்னுள் ஆர்த்தவள் அவளில்
அமைந்துள தெம்முடுக் கதனில் (6)

என்னெச மானும் என்னய லாரும்
என்னையுஞ் சலியையும் குறித்துப்
பன்னுவர் பலவும் பகடியாய் அவட்காய்
பாரிலெத் தொழிலையுஞ் செய்வேன்
இன்னுமோ ரேழாண் டிழிந்ததும் அவளை
இன்றிரு மணமுடித் திடுவேன்
பின்னிவண் இன்பம் பிறங்கிட வாழ்வோம்
எனினுமிம் முடுக்கினி லன்றே. (7)

(தழுவல்)

## நெஞ்சமே வெடித்தது

(எழுசீர் விருத்தம்)

தூங்கடி யன்பே துயிலெழல் வேண்டா
சுடருமப் பேரொளி யுன்றன்
வீங்கெழிற் கண்கள் கான்றதே வான்கீழ்
வெடித்திவண் தெறித்திட வில்லை
நீங்கிடும் வேளை நெருங்குவ தெண்ணி
நெஞ்சமே வெடித்தது துயரால்
தூங்கடி என்றன் ஆசையில் மண்ணைத்
தூவிடா துறங்கடி யுறங்கு.

(தழுவல்)

## நீங்கிடட்டும் உயிர்

(எழுசீர் விருத்தம்)

கண்டதும் நின்னைக் கனவினில் நெஞ்சம்
களிகொளத் துயில்களைந் தெழுந்தேன்
விண்ணுறு மீன்கள் மிளிர்ந்திடத் தென்றல்
மெல்லென வீசிய தெங்கும்
கண்ணிணை மலர்த்திக் கால்வழி நடத்தக்
கடுகினன் நினதறை நாடி
என்னிரு கால்கள் எங்ஙன முன்றன்
யன்னலை யணுகின தேரேன். (1)

கங்குலுங் கவியக் கடுவளி தணியக்
கானியா றமைதியுற் றதுவே
இங்கிதக் கனவின் நினைவெனக் கடிதில்
இற்றது சண்பக மணமும்
இன்றுணை மார்பில் வீழ்ந்துயிர் மாய்க்கும்
இரவிசைப் புள்ளென அன்பே
நின்னது மார்பில் யானுமென் மார்பில்
நீயுமாய் இறந்திடல் வேண்டும். (2)

என்னையிப் புல்லி னின்றுமேற் றூக்கு
இனியுயிர் பிழைத்திட மாட்டேன்
என்வறட் டுதட்டும் இமையிலும் முத்தம்
இன்பெயல் எனப்பொழி அன்பே
கன்னமுங் குளிர்ந்து வெளிறிட வுரத்துக்
கடிதடிக் கிறதிரு தயமும்
நின்னதொ டிறுக நெருக்கிடு வெடித்து
நீங்கிடட் டும்முயி ராங்கே. (3)

(தழுவல்—அஞ்சிறைத்தும்பி—ஈழநாடு)

## இன்னணம் வந்திடு

(எழுசீர் விருத்தம்)

என்னுடை அன்பே என்னைவிட் டங்கே
என்னடி செய்கிறாய் இந்நாள்
உன்னுடை நினைவால் ஊனுடல் குன்றி
உறக்கமும் ஊணுமே துறந்து
பன்னெடுங் காலம் பாழினிற் கழிக்க
படுந்துயர் பகரவொண் ணாதே
இன்னறுந் தேனே என்னரு மணியே
இன்னணம் வந்திடு வாயே.

# காதலின் உட்கிடை

(எண்சீர் விருத்தம்)

அருவிகள் ஓடி ஆற்றினைக் கூடும்
ஆறுகள் மெள்ள ஆழியைச் சேரும்
மருவிடும் இன்ப உணர்வுடன் விண்ணில்
மாருதம் என்றும் கலந்திடும் ஒன்றாய்
ஒருமையில் உலகில் எதுவுமே இல்லை
ஒப்பிலா இறையின் ஆணையால் யாவும்
இருமையிற் கூடிக் கலந்திட யானேன்
ஈங்குனைப் பிரிந்து இருந்திடல் வேண்டும். (1)

வானினை முத்தும் வரையினைப் பாராய்
வண்ணமாய் அலைகள் தழுவிடல் பாராய்
ஆணினை வெறுக்கும் பெண்மலர்க் கென்றும்
அலகிலா உலகில் இன்பமே யில்லை
மாநிலந் தழுவும் ஞாயிறு கதிரும்
மறிகடல் முத்தும் மதியுமிழ் கதிரும்
நீணிலந் தன்னில் நீயெனை முத்தா
திருந்திடில் யார்க்கென் பயனிவற் றாலே. (2)

(தழுவல்—அஞ்சிறைத்தும்பி—தினகரன்—30-9-62)

# மறந்திடு விருப்பமின்றேல்

(அறுசீர் விருத்தம்)

இறந்தபின் அன்பே என்பால்
இரங்கிநீ அழவும் வேண்டா
சிறுநிழல் மரமோ ரோஜா
செடிகளோ நடவும் வேண்டா
நிறும்பெயல் நீரும் பனியும்
நனைந்தபுல் முளைத்தி டட்டும்
மறந்திடு விருப்ப மின்றேல்
மனத்தில்வை விருப்ப முண்டேல் (1)

மரநிழல் காணல் எங்ஙன்
மழையினீர் உணரல் எங்ஙன்
இரவிசைப் புள்துன் புறுங்கால்
எழுப்பிடும் ஒலியும் கேளா
இருபொழு துறழும் மைமல்
வேளையென் நினைவு உள்ளத்
தொருமுறை முகிழ்ப்பின் விரும்பின்
தொழுதிடு இன்றேல் மறப்பாய் (2)

(தழுவல்)

## உறுதி

(அறுசீர் விருத்தம்)

பூதலம் போற்றும் மாக்சு
புவியினுக் களித்த கொள்கை
ஏதிலார் வாழ்வு ஓங்க
ஏற்றதென் றறிந்த போதே
தீதிலா அந்நற் கொள்கை
தீவெலாம் பரவ வேண்டி
போதெலாம் இறுதி மட்டும்
உழைத்திட் உறுதி பூண்டேன்

## புரட்சித்தாய் வாழ்க

(அறுசீர் விருத்தம்)

உழைத்துழைத் துலகோர் வேண்டும்
ஊனுடை உறையுள் தந்தும்
உழைப்பினுக் கேற்பத் தானும்
ஊதிய மின்றி வாழ்ந்த
உழைப்பவர்க் கன்னு ராற்றல்
உயர்வினை யுணர்த்தி வாழ்வு
தழைத்திட வழிச மைத்த
தகுபுரட் சித்தாய் வாழ்க (1)

உழைப்பவர்க் கன்றி யார்க்கும்
உலகுரித் தன்றென் றோதி
உழைப்பவர் தமைச்சு ரண்டிக்
கொழுத்தவர் வாழ்வுக் கூறு
விளைத்துநல் லாட்சி நாட்டி
வியத்தகு செயலி யற்றி
உழைப்பவர் வாழ்வுக் கூக்கம்
சொடுபுரட் சித்தாய் வாழ்க (2)

மண்ணில்செய் விந்தை கண்டு
மக்கள்வி யந்து நிற்க
விண்வெளிச் செலவு செய்து
வியப்பினை மேலுங் கூட்டி
ஒண்மதி யடிப்ப டுத்திக்
கொடியினை யாங்கு நாட்டி
மண்ணவர் மருள வைத்த
மாபுரட் சித்தாய் வாழ்க (3)

அறிவியற் றுறையு மற்றும்
    ஆய்கலை யனைத்தும் நன்கு
பெருகிட வழிச மைத்து
    பேரர சாக வாழ்ந்த
பெரும்பெரும் நாட்டுக் கெல்லாம்
    பேரர சாக வாழ
உருசிய நாட்டை வைத்த
    ஒருபுரட் சித்தாய் வாழ்க (4)

தொழிலினை யாள்வோர் தம்முள்
    தோன்றுசீர் கெடுக்கும் பேதம்
ஒழிந்தவர் ஒன்று பட்டால்
    உலகமே யவரின் ஆணை
வழியதாம் என்னு முண்மை
    வையகத் துரைக்கு மாபோல்
ஒளிர்ந்திடு மொப்பி லாத
    உயர்புரட் சித்தாய் வாழ்க (5)

(தூதன்—தேசாபிமானி—9-11-63)

## சதிகள் பலித்திடவே மாட்டா

(எண்சீர் விருத்தம்)

இந்நாட்டின் அரசியலில் ஏறத் தாழ
    இருபத்தைந் தாண்டுகளாய் ஈடு பட்டுத்
தந்நலமோர் சிறிதுமின்றி யுழைத்து வந்த
    தலைவர்களுள் வெகுசிலரே நெற்றி வேர்வை
சிந்திவாணுள் முழுதுழைத்தும் சிறிதும் வாழ்வு
    சிறந்திடாது வெம்பியுளம் நைந்து கண்ணீர்
சிந்துவோரின் வாழ்வுயர வேண்டி நாளும்
    சிறந்தமுறை யிற்பணிகள் செய்கின் றாரே. (1)

அந்நாளில் ஆட்சியினை எதிர்ப்ப தென்றால்
    அவ்வளவு எளிதான செயலோ என்ன?
எந்தலைவர் அதனையெல்லாம் அறிந்தி ருந்தார்
    எனினுந்தம் தாய்நாட்டின் விடுத லையைத்
தந்தலைமைக் கடனென்று உணர்ந்த தாலே
    தலைகொடுத்துந் தளையறுக்க உறுதி பூண்டு
தொந்தரவு பலபட்டார் எனினுங் கொண்ட
    கொள்கையினிற் சிறிதளவுஞ் சோர வில்லை

அரசியலில் விடுதலையடைந்த பின்னர்
ஆன்றபொரு ளாதார விருத்தி வேண்டி
இரவுபகல் உழைத்துவரு வேளை சாதி
இனமதமற் றும்பூசல் தன்னை நாட்டைச்
சுரண்டுபவர் தோற்றுவித்துத் தத்தம் வாழ்வின்
உயர்வுக்காய்ச் சூழ்ச்சிசெயக் கண்டு தம்முள்
விரவியுள வேற்றுமைகள் பலவொ ழித்து
விரிவான அடிப்படையில் சேர்ந்தார் ஒன்றாய்

(வேறு)

தொழிலாள விவசாய மத்யதர வர்க்கம்
தொழிலாளி தலைமையினில் ஒன்றுகூடி நாட்டின்
தொழில்வளத்தை கூட்டிமக்கள் நல்வாழ்வு வாழ
சோஷலிஸ திட்டமொன்றே ஏற்றதெனக் கூறி
தொழிலாளர் தலைமையினில் நல்லாட்சி ஒன்றை
தோற்றுவித்து மக்களெலாம் சேமமுடன் வாழ
வழிவகுத்த இடதுசாரி ஒற்றுமைமேன் மேலும்
வளர்கநீடு வாழ்கஎன வாழ்த்திடுவோமே

ஒன்றுபட்ட இடதுசாரி முன்னணியைக் கண்ட
ஒன்னலர்கள் தொடைநடுங்கி எப்படியு மிந்த
முன்னணியை முறியடிக்க வேண்டுமென தம்முள்
முடிவுசெய்து சூழ்ச்சிபல செய்துவருகின்றார்
என்னசூழ்ச்சி சீர்குலைவு வேலைசெய்த போதும்
எட்டுணையு மிவர்சதிகள் பலித்திடவே மாட்டா
என்றுறுதி கொண்டுநாங்கள் எல்லவரும் ஒன்றாய்
இடதுசாரி முன்னணியை முன்னெடுத்துச்
செல்வோம்.

பிளவுபட்டு யாண்டுபல வாழ்ந்ததொழி லாளர்
இனியொன்று சேர்ந்துதங்கள் உரிமைகளைக்
கோரி
கிளர்ந்தெழுவர் எனுமச்ச முற்றுமுத லாளர்
பிளவுதனை ஏற்படுத்த பெரிதுமுயல் கின்றார்
வளர்ந்துவரும் ஒற்றுமையை வலுப்படுத்தி ஓம்பி
வன்பகையைத் தோற்கடித்து வெற்றிவாகை
சூடி
வளமுடைய வாழ்வுபெற வஞ்சினமு ரைப்போம்
வருகதோழ வருகதோழ ஒருகொடிக்கீழ் வருக

(தூதன்—தேசாபிமானி—6-12-63)

## அளிப்பவரும் களிப்பவரும்

(எண்சீர் விருத்தம்)

மலைகுடைந்து மணிகொணர்ந்து மாநிலத்துக்
களிப்போர்யார்
மணியணிந்து மன்மகிழ்ந்து மாநிலத்திற்
களிப்போர்யார்
நிலமகழ்ந்து நெய்கொணர்ந்து நீணிலத்துக்
களிப்போர்யார்
நெய்ச்செலவில் நெடுஞ்செலவு நீணிலத்திற்
செய்வோர்யார்
அலைபிளந்து கலஞ்செலுத்தி அயற்செல்வம்
கொணர்வோர்யார்
கலத்தில்வந்த செல்வம்யாவும் காசினியிற்
சுவைப்போர்யார்
உலகிலுள்ள செல்வம்யாவும் உவந்தளிப்போன்
தொழிலாளி
செல்வம்யாவுஞ் சுவைப்பவனே சோம்பன்மிகு
முதலாளி

(தூதன்—தேசாபிமானி—13-1-62)

## புரட்சி காண்போம்

(அறுசீர் விருத்தம்)

பன்னெடுங் கால மாகப்
பாடுபட் டுழைத்து முன்றன்
இன்னல்கள் தீர்ந்த துண்டோ
ஈவதை இரந்து பெற்றே
இன்னுயிர் ஒம்பு கின்றாய்
இழிவிது ஒழிதல் வேண்டும்
என்னருந் தோழா இன்றே
எழுந்திடு புரட்சி காண்போம் (1)

வழிவழி யாக மற்றோர்
வாழ்ந்திட வேயுன் காலம்
கழித்தனை யன்றி மற்றுன்
காரியம் யாது செய்தாய்
பழிமொழி கேட்டுக் கேட்டுப்
பாரினில் வாழ்ந்தாய் போதும்
விழித்திடு தோழா இன்றே
விரைந்திடு புரட்சி காண்போம் (2)

உன்னுடல் வியர்வை சிந்தி
ஊரினை ஊட்டு கின்றாய்
உன்னுடல் இயங்கப் போதும்
ஊணுனக் கில்லை அந்தோ
இந்நெடும் புவியி லுன்போல்
இருக்கிறார் கோடி கோடி
இன்னுமேன் தயக்கந் தோழா
எழுந்திடு புரட்சி காண்போம். (3)

பஞ்சினில் பட்டில் ஆடை
பற்பல வகையில் நெய்து
கொஞ்சமா குவிக்கின் றாய்நீ
குவலயம் உடுத்த நாளும்
கொஞ்சிநீ ஆடும் உன்றன்
குழவியோ குளிரில் வாடி
வெஞ்சுரம் காணு தந்தோ
எழுந்திடு புரட்சி காண்போம். (4)

அழகழ காக ஏழெட்
டடுக்கினில் வீடு தந்தாய்
அளவளாய் ஆடிப் பாடி
அகமகிழ் கின்றார் மற்றோர்
மழையினுக் கொதுங்கத் தானும்
மனையுனக் கில்லை யென்றால்
உழைப்பவர் வாழ்வு என்னே
உடனெழு புரட்சி காண்போம் (5)

உன்னவர் தாமே யிந்த
உலகினை ஓம்பு கின்றார்
உன்னவர் இன்றேல் இந்த
உலகுதான் உய்வ தெங்ஙன்
உன்னவர் ஆற்றல் மாட்சி
உணர்ந்திடா மூடர்க் கின்றே
உன்னவர் உழைப்பின் மாண்பை
உணர்த்திடப் புரட்சி காண்போம் (6)

புரட்சியின் பொருளை ஓராப்
புரட்டர்கள் புரட்சி என்றால்
இரத்தபு ரட்சி யென்றே
எண்ணுவர் ஆனால் யானோ
புரட்சியென் சொற்கு மாற்றம்
பொருளெனக் கொண்டே இங்கு
புரட்சிகாண் போமே என்று
புகன்றனன் தோழா ஓர்வாய் (7)

(சாரங்கதேவர்—தேசாபிமானி—14-12-63)

## சூரிகாற்று நெடுமரம்போல் ஆதல் திண்ணம்!

(குறள் வெண்செந்துறை)

தத்துவத்தின் உட்பொருளை விளங்கிக் கொள்ளும்
சத்தியிலா மூடரெலாம் அறிந்தார் போலக்
கத்துகிறார் கழுதையெனத் தொண்டை வற்ற
தத்துவத்தை திரித்துச்சொல் கின்றோம் என்று!

திரிப்பவரார் என்பதனை அறிவர் மக்கள்
சிறிதளவும் விரிவுரைகள் வேண்டாம் ஒன்றும்
புரியாது மந்தைகளாய் தலைவர் பின்னே
பொதுமக்கள் திரிந்தகாலம் மலையே றிற்று (2)

திரிபுவாதம் செய்துதொழி லாளர் தம்மைப்
பிரிப்பதற்குச் செய்ம்முயற்சி யாவும் மிக்க
துரிதமாக முன்னேறுந் தொழிலாள் வோர்முன்
சூரிகாற்று நெடுமரம்போல் ஆதல் திண்ணம் (3)

மாறிடுமிவ் வுலகியலுக் கேற்பச் சற்று
மாறிடுமெக் கொள்கையுமே என்று மாக்சு
கூறியநற் போதனையை அறிந்தி ருந்தும்
குழம்பியுளம் கொதிக்கின்றீர் மாற்றம் என்றால்

சித்தாந்தம் விளங்காத குறையோ அன்றிச்
சித்தத்தில் ஏற்பட்ட கோளா றேஎன்?
எத்திக்கும் சென்றுபாரும் எல்லார் தாமும்
ஏற்றகொள்கை எதுவென்று கூறு கின்றார் (5)

செத்தவரை உயிர்ப்பிக்க முயலு கின்றீர்
பித்தருந்தாம் செய்யவிதை துணிய மாட்டார்
புத்துலகு குழியிட்ட கொள்கைக் கிங்கே
புத்துயிர ளித்திடநீர் முயலல் வீணே (6)

எத்தர்களே ஒன்றுமக்குக் கூறு கின்றேன்
இத்தரையில் பெரும்பாலார் ஏற்றுக் கொண்ட
சித்தாந்தம் தனைநெஞ்சில் ஏற்றால் அன்றி
செகமேத்தும் புதுவாழ்வு முயற்கொம் புமக்கே

கம்யூனிஸ்ட் என்றுலேபல் மாட்டிக்கொண்டால்
கம்யூனிஸ்ட் ஆகிவிடல் ஆமோ சொல்வீர்
செம்மைவழி அறிந்துசெல்லல் தாமே உண்மைக்
கம்யூனிஸ்ட் ஆகிடுதற் கேற்கும் ஓர்வீர் (8)

ஞாலமிதில் கோலங்கள் வேண்டா வேண்டா
நாளமதில் உணர்விருந்தால் போதும் போதும்
காலமிது கற்பிக்கும் உண்மை உண்மை
ஞாலமிசை அறியாதார் மூடர் மூடர் (9)

வாழ்க மாக்சு! வாழ்க ஏங்கல்ஸ்!
வாழ்க லென்னின்! வாழ்க அன்னுர்!
வாழ்வு சிறக்க வகுத்த கொள்கை!
வாழ்க நீடு! வாழ்க நீடே! (10)

(குருக்ஷேத்திரன்—தேசாபிமானி—28-12-63)

## உழைப்பாளர் ஆட்சி

(எண்சீர் விருத்தம்)

உழைப்பாள மக்களின்று உணர்ந்து கொண்டார்
உண்மையான உழைப்பாளர் ஆட்சி ஒன்றே
உழைப்பாளர் வாழ்வுயர உழைக்கும் என்னும்
உண்மையினை இதையுணரா மூடர் இன்னும்
உழைப்பாளர் நலன்கருதா துதறித் தள்ளி
ஊராள எண்ணுகிறார் உழைப்போர் எண்ணில்
முளைத்திடாதோ ஒருநொடியில் உலகு போற்றும்
ஒப்பற்ற உழைப்பாளர் ஆட்சி இங்கே.

# எதிர்காலம் எமதே

(எண்சீர் விருத்தம்)

உருக்குலைந்து சிதறுண்டு சிறப்பி ழந்தே
உயிர்வாழும் உழைப்பாள மக்கள் தங்கள்
உரிமையினைக் கடமையினை ஆற்றல் தன்னை
உணர்ந்தொன்று பட்டுவிட்டால் அவரு ழைப்பை
உறிஞ்சுமுத லாளிவர்க்க முதுகெ லும்பை
முறியடித்து தொழிலாளர் ஆட்சி ஒன்றை
உருவாக்க முடியுமென்றே அண்மைத் தேர்தல்
முடிபெமக்குக் கூறுகின்ற துறுதி யாக (1)

இந்நாட்டு முதலாளி வர்க்கம் மற்றும்
பிற்போக்குச் சத்திகளின் முதுகெ லும்பாய்
நின்றிலங்கும் யூஎன்பீத் தலைகள் செய்யும்
நீசமான பொய்ம்மலிந்த பிரசா ரத்தைக்
கண்விழித்த தொழிலாளர் கருத்திற் கொள்ளக்
கடுகளவும் இசையாரிந் நாளில் என்னும்
உண்மையினை உணர்த்துவதா யண்மைத் தேர்தல்
முடிபமைந்த தனையெண்ணி மகிழு வோமே (2)

சோசலிசம் எனும்பட்டங் கட்டிக் கொண்டு
சொகுசாக ஊர்சுற்றி உலகு சுற்றி
தேசநலன் சிறிதுந்தங் கருத்திற் கொள்ளா
தின்பத்தில் திளைக்கின்ற தலைவர் தம்மை
நீசரெனக் கண்டுகொண்டார் மக்கள் இன்று
நிச்சயமாய் இவருக்கிந் நாட்டில் யாரும்
நேசகரம் வருநாளில் நீட்டார் என்றே
இடைத்தேர்தல் முடிபெமக்கு ணர்த்து தன்றோ

பொரளையிடைத் தேர்தலது முடிபே எங்கள்
போராட்டம் வெற்றியுறும் எனவு ணர்த்தும்
வருங்காலம் எமதுகையில் ஐயம் வேண்டா
வளமான வாழ்வுகாண தோழா இன்றே
ஒருகொடியாம் செங்கொடியின் கீழொன் றுவாய்
உழைப்பாளர் எதிரிகளைத் தோற்க டித்தே
உருவாகும் மாற்றமதைப் பயன்ப டுத்தி
ஒப்பற்ற தொழிலாளர் ஆட்சி காண்போம் (4)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—1-2-64)

# துன்பத்தின் எல்லை நின்று
(வெண் செந்துறை)

ஊராள வந்தவரே ஊர்நிலையை
உணராமல் ஊராள முயலுகின்றீர்
தீராத பகைமையினைத் தேடி விட்டீர்
திரள்கின்றார் மக்களுமக் கெதிராய் எங்கும் (1)

இருண்டகண்ட மெனுமாப்பிரிக்க நாட்டின்
இனவொதுக்கல் கொள்கையினுக் கேற்ப நீரும்
இருக்கின்ற தாளுரிமை என்றதாலே
இந்நாட்டில் தமிழினத்தை இம்சிக்கின்றீர் (2)

இந்நாட்டில் வழிவழியாய் வாழும் மக்கட்
கிந்நாட்டுக் குடியுரிமை மறுத்தீர் முன்னர்
இந்நாளில் அவரையெலாம் கள்ளத் தோணி
எனக்கைது செய்தல்லற் படுத்துகின்றீர் (3)

சிக்கனிறை மொழிக்கொள்கை தன்னாலிந்தத்
தேசத்தில் தமிழினத்தை ஒடுக்கி விட்டீர்
தக்கசெயல் இதுவன்று தமிழர் தாமும்
தமதுரிமை பெற்றிங்கு வாழல் வேண்டும் (4)

விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வேண்டி
விவசாயி தலைவந்த ஊர்வலத்தை
முளையினிலே கிள்ளிவிட்டீர் மூர்க்கமாக
முறையற்ற செய்கையினை செய்து விட்டீர் (5)

காராளர் கைகொடுத்த தாலன்றோநீர்
அல்லலின்றித் தேர்தலிலே வென்று வந்தீர்
ஊராள உழைவைத்த மக்கள் துன்பம்
துடைப்பதற்கு வழியேதும் செய்தீரில்லை (6)

உடுதுணிக்குக் கட்டுப்பாடின்று நாளை
உணவினுக்கு மறுநாளை தற்கோ என்றே
விடுதலையாற் பயனெய்தா மக்கள் இன்று
வினவுகிறார் துன்பத்தின் எல்லை நின்றே (7)

பாடுபட்டு உழைப்பவர்க்குக் கருவி இல்லை
படித்தவர்க்கு செய்வதற்கு வேலை இல்லை
கேடுகெட்ட ஆட்சியிலே எங்கும் இல்லை
இல்லையென்ற சொல்லன்றி வேறொன்றில்லை (8)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—15-2-64)

# இனவாதத் தலைமையினால் இழிவன்றி வேறேயில்லை

(எண்சீர் விருத்தம்)

இந்நாட்டு விடுதலைக்குப் போராடும் வேளை
இனபேதம் ஏதுமின்றி உடன்பிறந்தார் போல
ஒன்றாக இணைந்தொப்பில் தலைவர்வழி நின்றே
ஒன்னலரை எதிர்த்துவெற்றி கண்டோமந் நாளில்
இந்நாட்டை இந்நாளிற் பிணித்தபெரு நோயாம்
இனவாதந் தனிலிருந்து விடுவிக்க நாட்டைச்
செந்தலைவர் கீழொன்றாய் சேர்ந்திடுவோம் வாரீர்
சிறந்தவழி அதுவேதான் சிந்தையினிற் கொள்வீர்

உலகிலுள்ள மக்களெல்லாம் உய்யவழி வேண்டி
உத்தமர்கள் வகுத்தநெறி உணர்த்துவது தேரா
துலவுமக்கள் தம்முள்ளே பிளவுகளைத் தோற்றி
துய்யநெறி அவைபெயரால் துன்புவிளை வித்து
நிலவமைதி யின்மையினைச் சாதகமாய்க் கொண்டு
நீளநாட்டை யாளவுன்னும் நீசரினை அகற்றி
நலனெல்லாம் பெற்றுலகு நல்குமின்பந் துய்க்க
நமைப்பிரிக்கு மினப்பூசல் ஒழித்திடுதல் வேண்டும்

(வேறு)

பாரதத்தின் விடுதலைக்காய்ப் பாடு பட்டு
ழைத்தவரென் றெல்லவரு மேத்திப் போற்றுந்
தீரன்மகான் காந்தியவன் செய்த ஒப்பில்
தியாகமதிற் றினையளவு தானுஞ் செய்யாச்
சோரகாந்தி மாக்களீழ நாட்டிற் செய்யுஞ்
சூதுநிறை பிரசாரந் தன்னாற் கெட்டுச்
சீரழிந்த தமிழ்மக்கள் வாழ்வு மீட்டுஞ்
சிறப்பதற்கு செந்தலைவர் கீழொன் றாவோம் (3)

இனவாதப் போராட்டம் மூலந் தங்கள்
இழந்தபல வுரிமைகளைப் பெறலா மென்றே
இனவெறியர் கூச்சலிட்டு நாட்டை முன்னர்
இரத்தத்தில் மிதக்கவைத்தார் தமிழர் தங்கள்
இனவுரிமை மொழியுரிமை பெற்றா ரில்லை
இழிவான ஓரினமாய் ஒதுக்கப் பட்டார்
இனவாதத் தலைமையினால் தமிழி னத்துக்
கென்றென்றும் இழிவன்றி வேறே இல்லை. (4)

பெரும்பான்மை மக்களது இணக்க மின்றி
இந்நாட்டி லுரிமையுடன் தமிழ மக்கள்
ஒருபோதும் வாழ்ந்திடவே முடியா தென்னும்
உண்மையினை உணர்த்திமக்கள் மீட்டுந் தங்கள்
உரிமையினைப் பெறுவதற்குச் சுரணை யற்ற
சுயநலஞ்சேர் தமிழரசுத் தலைமை என்றும்
ஒருபெரிய தடையென்ப துணர்த்தி இங்குச்
சுதந்திரமாய் தமிழினமும் வாழ வைப்போம்

பன்னூருண் டுரிமையுடன் பாரோர் போற்ற
பண்புடனே வாழ்ந்ததமிழ் மக்கள் இன்றோ
தன்னலஞ்சேர் தலைவர்வழி நின்ற தாலே
தம்முரிமை தமையிழந்து தாழ்ந்தா ரிங்கே
தன்மானத் தோடிங்குத் தமிழ மக்கள்
தலைநிமிர்ந்து தம்முரிமை யாவும் பெற்று
பொன்னான நல்வாழ்வு வாழ மேலாம்
பொதுவுடமை சமுதாயம் ஒன்ற மைப்பீர். (6)

(பாட்டாளிப் பாவலன்—தேசாபிமானி—22-2-64)

## இடமில்லை இனவெறியர்க்கினிமேல்

(எண்சீர் விருத்தம்)

இடதுசாரிக் கட்சியினர் செய்து வந்த
இடையறுத கிளர்ச்சியினால் ஆட்சி யாளர்
கடந்தபல ஆண்டுகளாய்க் கடைப்பி டித்த
கடுமையான இனவொதுக்கல் கொள்கை விட்டு
வடகிழக்கில் பிரதேச சபைய மைத்து
வாழ்தமிழர்க் குரிமைதர மனங்க னிந்தார்
இடமில்லை இனவெறியர்க் கினிமேல் நாட்டின்
ஏற்றத்துக் குழைத்திடுவோம் ஒன்றாய் இங்கே.

இனப்பூசல் இருக்குமட்டும் ஈழ நாட்டின்
செல்வநிலை சீரழிந்து சிதையு மன்றித்
தினைத்துணையும் ஏற்றமுறா தெனவ றிந்து
சிறுபான்மை இனமக்கட் குரிமை நல்க
மனங்கொண்ட மாட்சியினை வாழ்த்து கின்றோம்
மனதார வாயளவில் நின்றி டாமல்
மனந்துணிந்து தக்கநட வடிக்கை தன்னை
வல்விரைவில் எடுத்திடுவர் எனுமெண்ணத்தால்

நாட்டுநலன் விழைகின்ற நல்லோர் எல்லாம்
ஞாயமான முறையின்மொழிப் பிரச்சினையை
ஆட்சியினர் தீர்ப்பதற்குத் தம்மா லான
ஆதரவை அளித்துதவி நாட்டில் மீண்டும்
காட்டுணர்வு மிக்கவின வெறியர் நாசக்
கலகத்தை மூட்டிவிட முயன்றால் அதனை
கூட்டுணர்வோ டொன்றித்து முறிய டித்துக்
குழிப்புதைக்க சிறிதளவுந் தயங்கக் கூடா. (3)

சிங்களத்தில் வாழுகின்ற மக்கள் தம்முள்
சிறுபான்மை யினரான தமிழ மக்கள்
இங்குபல நூற்றுண்டாய் உரிமை யாவும்
ஏனையபல் லினத்தவர்போல் பெற்று வாழ்ந்து
சிங்களத்தின் உயர்வுக்காய் பாடு பட்ட
சீர்மையினை தேர்ந்துபெரும் பான்மை மக்கள்
இங்கவர்கள் உரிமையுடன் என்றும் வாழ
ஏற்றவகை செய்திடுதல் வேண்டு மன்றே (4)

மொழியுரிமை இனவுரிமை யாவும் பெற்று
முன்னைப் போலிங்குத் தமிழ மக்கள்
செழிப்பான நல்வாழ்வு மீண்டும் வாழ
சிங்களரின் ஒத்துழைப்பு நாடி நிற்றல்
இழிவுதமிழ் இனத்துக்கென் றுரைத்து மக்கள்
இனவுணர்வை தூண்டிவிட்ட வெறிய ரின்று
விழித்துவிட்ட தமிழினந்தம் அணியை விட்டு
விலகிடுதல் கண்டஞ்சி விழிக்கின் றாரே (5)

சமட்டியினர் தலைமையினில் தமிழர் தங்கள்
தன்மானம் இழந்தனரே யன்றி யிங்குத்
தமதுரிமை எதுவேனும் பெற்று ரில்லை
தமிழரிங்கே உரிமையுடன் வாழ வேண்டின்
சமமாக மக்களெலாம் என்றும் வாழ
தகுந்தநெறி யெனவுலகு கண்ட ஒப்பில்
சமதர்ம ஆட்சியிங்கு மலர வேண்டும்
தமிழரிதை நன்குணர வேண்டு மின்றே (6)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—29-2-64)

# நல்வாழ்வு வாழ்தல் சாலும்

(எண்சீர் விருத்தம்)

அதிகார பீடத்தில் அமர்ந்தி ருக்கும்
ஆணவத்தால் மனம்போன வழியில் மக்கள்
எதிர்ப்பினையும் எண்ணுமல் நாட்டை ஆள
எண்ணியதால் அடியோடு அழிந்து பட்ட
அதிகார வர்க்கத்தின் வழியில் இங்கே
ஆட்சியினை நடத்தமுயல் கின்றீர் என்னே
மதியீனம் மக்களது குரலி னுக்கு
மதிப்பளியு மின்றேல்நீர் மறைத லுறுதி (1)

நிலையான நல்வாழ்வு தருவோம் என்று
நீளவுரைத் தாட்சிபீடம் ஏறி னீரே
விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து மக்கள்
விழைகின்ற மேலான வாழ்வு நல்க
நிலையான திட்டமேதும் தந்தீ ரில்லை
நீங்காத துன்பத்தின் பிடியிற் சிக்கி
குலைந்துமனம் உழலுகின்ற மக்கள் துன்பக்
குரலினையே கேட்கமறுக் கின்றீர் என்னே (2)

உழைப்பாள மக்களின்று உணர்ந்து கொண்டார்
உண்மையான மக்களின தாட்சி ஒன்றே
உழைப்பாளர் வாழ்வுயர உழைக்கும் என்னும்
உண்மையினை இதையுணரா மூடர் இன்னும்
உழைப்பாளர் பெயர்சொல்லி ஊரை யாள
முனைகின்றார் முறியடித்து இவர்தம் முயற்சி
உழைப்பவரோ டொன்றித்து மக்கள் நாட்டில்
உண்மையுழைப் பாளராட்சி காண வேண்டும்.

இந்நாட்டி லுள்ளதொழிற் சங்கம் எல்லாம்
இணைந்துதொழி லாளரது கோரிக் கைக்காய்
முன்னின்று போராட்டம் நடத்த செய்யும்
முயற்சியினைப் பொதுமக்கள் ஆத ரித்து
வென்றெடுக்க அவர்தமது கோரிக் கையை
வேண்டுமரு முதவிகளை செய்தால் வாழ்வை
பின்னியுள்ள பிணியாவும் மறைந்து மக்கள்
பீடார்ந்த நல்வாழ்வு வாழ்தல் சாலும். (4)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—21-3-64)

# உழைக்கும் வர்க்கத்திரே

(எண்சீர் விருத்தம்)

சிதறுண்டு கிடந்ததொழி லாளர் தம்மைச்
சேர்த்தொன்றாய் சங்கமமைத் தன்னார் வாழ்வை
வதைத்தபல வின்னல்களைத் துடைத்தெறிந்து
வாகான நல்வாழ்வு அவருக் களிக்க
முதலாளி வர்க்கத்தை முனைந்தெதிர்த்து
முறியடித்த கம்யூனிஸ்ட் தலைவர் தம்மை
இதயத்தால் வாழ்த்துகிறோம் இந்த நாட்டின்
எண்ணரிய தொழிலாளர் சார்பி லின்றே. (1)

வாழ்வெல்லா முழைத்துபிறர் வாழ்வை மேலும்
வளமாக்கித் தந்தவுழைப் பாள மக்கள்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி நலியக் கண்டு
தந்துயரங் கருதாது வாணா ளெல்லாம்
ஏழ்மையுற்ற உழைப்பாளர் ஏற்றங் காண
இடையறாது போரிட்ட இடது சாரித்
தோழர்கள் அனைவரையும் வாழ்த்து கின்றோம்
தொழிலாளர் சார்பிலின்று வாழ்க என்றே (2)

இடதுசாரி ஐக்கியத்தின் நண்பர் என்றே
எள்ளளவும் வெட்கமின்றி இயம்பு கின்ற
இடதுசாரி முன்னணியின் சத்து ருக்கள்
இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கந் தன்னை
முடமாக்க முயன்றபல முதலாள் வோரின்
முயற்சிகளுக் குறுதுணையா யிருந்து கட்சி
நடவடிக்கைக் கிழிவுதரும் இனபே தத்தை
நாட்டினிலே கிளறிவிட முயலு கின்றார். (3)

இனவெறியால் நாடிரண்டு பட்ட தன்றி
எந்தவொரு பிரச்சினையும் தீர்ந்த தில்லை
சனங்களிடை இனவெறியைக் கிளறி விட்ட
தலைவர்களும் இன்றதனை உணர்ந்து கொண்டார்
இனக்குழப்பம் இனியிங்குத் தோன்றா தென்றே
எல்லவரும் நம்பியுள இற்றை நாளில்
மனந்துணிந்து மாக்ஸ்வாதம் பேசு வோரே
மக்களிடை இனபேதம் வளர்க்கின் றாரே (4)

சேயிழந்த தாயுந்தா யிழந்த சேயும்
செல்வர்களும் ஏழைகளும் பெண்ணும் ஆணும்
நாயினுங்கே டாகவினக் குழப்ப நாளில்
நடுத்தெருவில் மானமழிந் துயிரி ழந்து
வாயிலின்றி வீடின்றி வந்து முகாமில்
வருந்தியதைக் கண்டவர்கள் மீண்டும் இங்குத்
தீயினும்பே ரழிவுண்டு பண்ணு நீர்மைத்
தீமைநிறை இனவெறியைத் தூண்ட லாமோ (5)

திறமையற்ற ஆட்சியினால் விளைந்த தீங்கைத்
தீய்த்துவிட வக்கற்ற ஆட்சி யாளர்
குறையற்ற தொழிலாளர் போராட் டத்தைக்
குறைகூறித் தப்பிவிட முயலு கின்றார்
நிறைவாக எலாம்பெற்று மக்கள் இங்கு
நெடுவாழ்வு வாழ்வதற்கு நீக்கி இற்றைக்
குறைமதியர் ஆட்சியினை விரைவில் சற்றும்
கோடாத செவ்வாட்சி காண்போம் வாரீர் (6)

தொழிலாளி விவசாயி தம்முட் பேதம்
தோற்றுவித்த தொழிலாளர் சத்து ருக்கள்
விழித்துவிட்ட தொழிலாளர் ஒன்று சேர்ந்து
விரிந்தவொரு அடிப்படையில் விரைவில் இங்கு
தொழிற்சங்கப் போராட்டம் நடத்த எண்ணிச்
சுறுசுறுப்பாய் நடவடிக்கை எடுத்தல் கண்டு
விழிக்கின்றார் விரைகின்றார் வேற்று மையை
விதைத்தற்கு சிறிதளவு மிடந்த ராதீர். (7)

இரண்டுபட்டு உழைப்பாளி வர்க்கம் இங்கே
இருக்குமட்டு மிவர்குருதி உறிஞ்சி வாழும்
சுரண்டுமியல் முதலாளி வர்க்கம் மேலாம்
சுபிட்சமான நல்வாழ்வு வாழல் கூடும்
முரண்பாடு தவிர்த்தொன்றாய் தொழிலா ளிகளும்
உழைப்பாள விவசாய மக்கள் தாமும்
திரண்டிட்டால் செங்கொடிக்கீழ் வர்க்கப் போரில்
சிறந்தவெற்றி ஈட்டிடுவோம் ஐயம் இன்றே. (8)

உலகத்துத் தொழிலாளர் வர்க்கம் மற்றும்
உலகதொழிற் சங்கங்கள் யாவும் எங்கள்
பலமிக்க அணியினது போராட் டத்தில்
பக்கபல மாயிருக்கும் எனுநம் பிக்கைப்
பலத்துடனே உலகத்துத் தொழிலாள் வோர்கள்
பல்லாண்டு மென்மேலும் வாழ்க என்று
இலங்கைதொழிற் சங்கங்கள் சம்மே ளனத்தின்
இதயபூர்வ வாழ்த்துகளை தெரிவிக் கின்றோம்.

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—7-3-64)

## புதுப்பாதை திறந்திட்ட புரட்சிநாள்!

(எண்சீர் விருத்தம்)

ஏகாதி பத்தியப்போர்க் கார ணத்தால்
எழுந்தபெரு நெருக்கடியை தாங்க மாட்டா(து)
ஏகாதி பத்தியமே சரியும் வேளை
எதிர்ச்சத்தி பலம்பெற்று வளரும் வேளை
ஆசாவென் றுருசியநாட் டெழுந்த புரட்சி
அடிமைகளின் கிளர்ச்சியினில் நிகழ்ந்த வளர்ச்சி
வாகான தோள்படைத்த தொழிலாள் வோரின்
வன்மையான போருணர்வு ஓங்கிற் றன்றோ (1)

அதிகநேரம் வேலைசெய்து அலுத்துப் போன
அமரிக்கத் தொழிலாளர் அன்று தங்கள்
உதிரத்தைச் சிந்திஉயிர்ப் பலிகொ டுத்த
உன்னதமாப் போராட்டந் தனைமு றிக்க
சதிபுரிந்த அமரிக்க முதலர் பாதந்
தாங்குகிற யூஎன்பீத் தலைகள் இங்கே
அதிகாரத் திருக்குமட்டும் மேதி னத்தை
அனுமதியா தின்றுடல் விந்தை யன்றோ. (2)

இடதுசாரி ஐக்கியத்தை முறிய டிக்க
ஏகபோக பத்திரிகை செய்யும் சூழ்ச்சிக்
குடனிருந்து துணைபுரியும் யூஎன் பீயை
கொழுத்தபண மூடைகளை ஒழித்துக் கட்டி
இடதுசாரித் தலைவரின்கீழ் செம்மை யாட்சி
இந்நாட்டில் நிறுவுதற்கு தீவி லுள்ளோர்
திடங்கொண்டு போராட உறுதி கொள்வோம்
தீரமுடன் திரண்டெழுவீர் வெற்றி நமதே. (3)

சருவதேச தொழிலாளர் ஒற்று மைக்கும்
தனியுடைமை அமைப்பினையே ஒழிப்ப தற்கும்
பொருளியலில் அரசியலில் சுதந்தி ரத்தை
புவியிலுள்ளோர் அனைவருமே அடைவ தற்கும்
வருக்கபோதம் புகட்டிதொழி லாள மக்கள்
வளர்ச்சியினுக் கிடையூறு சிறிது மில்லா
ஒருவாட்சிக் கானபகி ரங்கப் போரை
உடனடியாய் துவங்குதற்கு சூளு ரைப்போம்.

(வேறு)

சருவதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பிளக்க
சதிசெய்யும் சீனாவைப் பின்பற்றி இங்கே
பெரும்பிளவை இடதுசாரி இயக்கத்தில் செய்ய
பேதையர்கள் பெருமுயற்சி செய்கின்றாரவரை
வருக்கவுணர் வோங்கியுள்ள பாட்டாளி வர்க்கம்
வாலறுத்து மூக்கறுத்து இழிவுசெய்து நாட்டின்
ஒருமூலை தனிற்றானும் ஒதுங்கவிட மாட்டா
தொழித்திடுமே இதுவுறுதி இதுவுறுதி ஓர்வீர்

சனநாய கத்தையிங்குக் காப்பாற்றி மேலும்
தாராள மாயதனை விரிவாக்கி மக்கள்
மனங்களிக்க தேசாதி காரமதை அவர்தம்
மலர்க்கரத்தி லளித்திடவும் நிலையான அமைதி
தனைநாட்டி சுரண்டல்முறை அடக்குமுறை அற்ற
சமவுடைமை உலகத்துக் கானவழி காண
அனைத்துலகும் உள்ளதொழி லாளருடன் ஒன்றாய்
ஆர்த்தெழுதற் கின்றே நாம் சபதமிடு வோமே.

உலகின்கண் போரொழித்து மனிதகுலம் எல்லாம்
உயர்வான வாழ்வுபெற போராடும் நாடு
பலவற்றின் தொழிலாளத் தோழர்க்கும் சர்வ
தேசீய ஒற்றுமையு ணர்ச்சியொடு மேலாம்
அலகிலாத அன்புணர்ச்சி யோடுமெங்கள் அன்பின்
அறிகுறியாம் வணக்கமது செலுத்தியுள மார
உலகத்துத் தொழிலாளி வர்க்கம்மேன் மேலும்
உறுதியுடன் போராட வாழ்த்துகின்றோம் வாழ்க.

(வேறு)

முதலாளர் உளத்தினிலே பயத்தைத் தோற்றி
முதலாளர் எதிரிகளுக் கூக்கம் ஊட்டி
முதன்முதலாய் மாபெரிய சாத னைக்கு
உதாரணமா யுலகத்தி லுள்ளார்க் கெல்லாம்
எதிர்காலம் உண்டென்னும் நம்பிக் கையை
இம்மியுமே ஐயமின்றி மனத்தி லூட்டி
புதுப்பாதை திறந்துவிட்ட புரட்சி நாளாம்
புவியெங்கும் கொண்டாடும் மேநாள் வாழ்க.

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—1-5-64)

# பத்திரிகை ஏகபோகம் உடைத்தெறிதல் வேண்டும்

(எண்சீர் விருத்தம்)

நாட்டுநலன் விழைந்தாட்சி யாளர் இன்று
நலன்பயக்கும் இடதுசாரி முற்போக் காளர்
கூட்டுறவு கோரிநிற்கும் வேளை யாட்சிக்
குள்ளிருக்கும் வலதுசாரிப் பிற்போக் காளர்
கூட்டமதைத் தூண்டிவிட்டு நாட்டில் மீண்டும்
குழப்பநிலை யுருவாக்கி யூஎன் பீயை
ஆட்சிபீடம் அமர்த்திவிடப் பத்ரி கைகள்
அறுமுயற்சி செய்கின்றன என்னே என்னே (1)

சீர்குலைவு வேலைகளில் தேர்ந்த சிண்கள்
சிதைப்பதற்கிம் முற்போக்கு முயற்சி யையும்
போர்க்கோலம் பூண்டுநிற்றல் விந்தை அன்றே
புரட்சியினை விழைபவர்போல் வேடமிட்டு
தார்ச்சட்டி வீரருக்கும் கத்தோ லிக்க
தறுதலைக்கும் யூஎன்பிப் பிற்போக் குக்கும்
ஆர்வமுடன் ஒத்தாசை புரிகின் றாரே
அதுதானே விந்தையிலும் விந்தை தோழா (2)

நடமாடும் நலிவனைத்தும் ஒழிய வேண்டின்
நாட்டிலுள்ள முற்போக்குச் சக்தி மற்றும்
இடதுசாரிச் சக்தியெலாம் இணைந்தொன் றாகி
ஏற்றமிகு முற்போக்குத் திட்டம் ஒன்றை
உடனடியாய்ச் செயல்படுத்தல் வேண்டு மன்றேல்
உள்நாட்டு வெளிநாட்டுப் பிற்போக் காளர்
திடமாகத் தம்மாட்சி நிறுவி நன்றாய்த்
தீய்த்திடுவர் தொழிலாளி வாழ்வை இங்கு (3)

தடைகள்பல இட்டபோதும் தளர்வு ருமல்
தான்கொண்ட கொள்கையினைத் தயக்க மின்றி
நடைமுறைக்கு கொண்டுவர முயலு கின்ற
நாட்டுமுதல் அமைச்சருக்கு மேலும் மேலும்
தடைகளிட முயல்பவரின் சூழ்ச்சி யாவும்
தவிடுபொடி யாக்கியிங்கே சிறீஇ லங்கா
இடதுசாரி கூட்டாட்சி ஏற்ப டுத்த
எம்சக்தி முழுவதையு மர்ப்ப ணிப்போம் (5)

இடதுசாரி ஐக்கியத்தை சீர்கு லைக்க
எழுந்தபல சத்திகட்கும் ஊக்கம் தந்து
முடக்கமுதை யூஎன்பீக் காளும் ஆசை
முட்டிவிட்ட ஏகபோகப் பத்ரி கைகள்
கடந்தபல வாரமாக மீண்டும் தங்கள்
கைவரிசை தமைக்காட்டி வருதல் காண்போர்
உடனடியாய்ப் பத்திரிகை ஏக போகம்
உடைத்தெறிய வேண்டுமென கோரு ருரே (4)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—23-5-64)

# சோஷலிஸம் மலர்தற்கு உழைப்போம்!

(எண்சீர் விருத்தம்)

கூட்டாட்சி தவிர்த்தற்குக் கோஷ்டி சேர்ந்த
கொடியரின்று தோல்வியினுல் மனம்பு ழுங்கி
கூட்டாட்சிக் கூறுசெயக் குழுமு கின்ருர்
கொடுவிஷப்போல் ஏறுகிற பொருளின் விலையால்
நாட்டினருக் கேற்பட்ட வெறுப்பை யாட்சி
நனிவிரைவில் அகற்றிவிடல் வேண்டும் இன்றேல்
ஆட்சியினைக் கவிழ்ப்பதற்கு மக்கள் தம்மை
அக்கொடியர் பயன்படுத்தி விடுவ ரன்ருே (1)

நாட்டுவளஞ் சிறத்தற்கு வேண்டுஞ் செல்வம்
நாட்டினிலே திரட்டவழி யிருப்ப மேலை
நாட்டவரைக் கையேந்தி நிற்றல் ஏனே
நலம்பயக்கும் சோஷலிஸப் பொருளா தாரக்
கோட்பாடு வழிநின்று குவித்துச் செல்வம்
கூறிட்டு யாவருமே துய்க்கும் வண்ணம்
நாட்டுவமே நம்நாட்டிற் சோஷ லிஸ்டு
நல்லாட்சி மக்களெலாம் ஒன்று சேர்ந்தே (2)

அரசாங்க இலாகாக்கள் எங்கும் ஊழல்
அதிகரித்து முடைநாற்றம் வீசு தந்தோ
தரங்கெட்ட யூஎன்பீச் சதிகா ரர்கள்
தலையிடத்தில் இருக்குமட்டும் இலஞ்சம் ஊழல்
ஒருசிறிதுங் குன்றுதே இவரைக் களைந்தால்
உயிர்பிழைத்த தாட்சியின்றேல் மக்கட் குள்ள
அருவெறுப்பு மேன்மேலும் கூடி ஈற்றில்
அடியற்ற மரம்போல வீழ்தல் திண்ணம் (3)

இந்நாட்டில் இனவெறிக்குத் தூபம் போடும்
ஏகபோகப் பத்திரிகை சிறீலங் காவும்
முன்னணியும் கூட்டாட்சி யமைப்ப தற்கு
முழுமூச்சாய் எதிர்ப்புதனைக் காட்டி நாளும்
உண்மையற்ற செய்திகளைப் பரப்பு தந்தோ
ஒவ்வாத இச்செய்கை வளர விட்டால்
ஒன்னலர்கள் கூட்டாட்சி முறிய டிக்க
ஒப்பற்ற நல்வாய்ப்புத் தோன்றல் திண்ணம் (4)

ஏகாதி பத்தியத்தின் ஏவல் நாய்கள்
இந்நாட்டைத் தமதாக்க எண்ணி இங்குச்
சாகாது மயங்கியுள வகுப்பு வாதந்
தனைமீண்டும் கிளப்பிவிட்டு குழப்பம் நாட்டில்
நோகாமல் உண்டுபண்ண முயலு கின்றார்
நொருக்கியவர் முயற்சியினைப் பேதம் நீக்கி
வாகான புதியசமு தாயம் இங்கே
மலர்தற்கு மக்களெலா முழைப்போம் வாரீர் (5)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—20-6-64)

## இனவெறிதூண்டல் மடமை

(எண்சீர் விருத்தம்)

இனவெறிக்குத் தூபமிட்டுப் பாராள் மன்றில்
இடம்பிடித்த தமிழரசுத் தம்பி ரான்கள்
இனக்கூச்சல் இட்டினியுந் தமிழர் தம்மை
ஏமாற்றல் இயலாதென் றெண்ணி மக்கள்
மனங்கவர்ந்து மறுமுறையு மன்றம் ஏற
மாற்றுவழி யொன்றுகண்டார் அதற்கி யைய
அனைவருந்தாம் வகிக்கின்ற பாராள் மன்ற
ஆசனங்கள் தமைவாபஸ் செய்தல் வேண்டும்.

இதையெதிர்த்து கட்சியினுள் கிளர்ந்தெழுந்தோர்
ஏற்கோம்யாம் இஃதடுக்கா தென்னச் சொன்னார்
இதையடுத்துப் பலர்பிரிந்து புதிய கட்சி
ஏற்படுத்த முயலுகின்றார் என்னே என்னே
இதயத்தால் தூயரிவர் தமிழினத்தின்
ஏற்றத்துக் குழைப்பரென நம்பி னோர்கள்
சிதைந்தெண்ணம் தீயரிவர் செய்கை கண்டு
சீற்றமுற்று எழுகின்றார் இவரை எதிர்த்தே (2)

கூட்டாட்சி தமிழர்களின் பிரச்ச னையைக்
குறுகியவோர் காலத்துள் தீர்த்து வைத்து
நாட்டினிலே நல்லாட்சி காண எண்ணி
நைந்துபோன இனவுறவைப் பலப்ப டுத்த
வேட்கின்ற வேளையினில் மீண்டும் நாட்டில்
வேற்றுமையை கிளறிவிட முயலுஞ் செட்டி
கோட்டியினைத் தமிழ்மக்கள் ஒழித்துக் கட்ட
கொஞ்சமுமே பின்னடைதல் கூடா தன்றே (3)

சிங்களத்தில் வாழ்கின்ற மக்கள் தம்முள்
சிறுபான்மை மக்களான தமிழ மக்கள்
இங்குபல நூற்றாண்டாய் உரிமை யாவும்
ஏனையபல் லினத்தவர்போல் பெற்று வாழ்ந்து
சிங்களத்தின் ஏற்றத்துக் குழைத்த சீர்மை
தேர்ந்தபல சிங்களர்கள் தமிழ மக்கள்
இங்குரிமை யுடன்வாழ இசையும் வேளை
இனவெறியை தூண்டிவிடல் மடமை யன்றே (4)

இனவெறியை மதவெறியை கிளறி நாட்டில்
ஏற்கனவே குழப்பத்தை ஏற்ப டுத்திச்
சனங்களிடை மதிப்பிழந்த யூஎன் பீயும்
தமிழர்களின் இனவாதத் தலைகள் தாமும்
சனநாய கத்துக்குச் சிறீமா ஆட்சி
சவக்குழியைத் தோண்டமுயல் கின்ற தென்று
மனங்குழம்பிப் பிதற்றுகிறார் மக்கள் சற்றும்
மதிப்பளியா ரிவர்சொல்லுக் கினியிந் நாட்டில் (5)

கொத்தடிமை யூஎன்பீ மீண்டும் ஆட்சிக்
கொலுவேறும் ஆசையினால் எங்குந் தீய
சத்திகளைத் தூண்டிவரும் இற்றை வேளை
தமிழரசுக் கட்சியினர் செய்து கொண்ட
புத்தியற்ற வாபஸ்செயும் புதிய ஸ்டண்டும்
போர்முறையை மாற்றவெண்ணு மிளைஞர் முடிபும்
இத்தரையில் மீண்டுமொரு இனக்கு ழப்பம்
ஏற்படுத்தும் என்பதிலே ஐயம் வேறு (6)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—15-8-64)

## ஏழ்மையகற்றப் புறப்படடா

(முச்சீரிரட்டைச் சமனிலைச்சிந்து)

ஏழை மகனே எழுந்திடடா—உன்றன்
ஏழ்மை யகற்றப் புறப்படடா
வேளை இதுவே தெரிந்திடடா—உறுதி
வெற்றி என்ப துணர்ந்திடடா (1)

நாளும் பொழுதும் உழைக்கின்றாய்—உடல்
நலிந்து மெலிந்து தேய்கின்றாய்
கூழும் இன்றிக் குமைகின்றாய்—கும்பி
கொதிக்கக் கொதிக்க மாய்கின்றாய் (2)

வாழும் முறைமை தேர்கின்றாய்—வாழ
வழியே யி . றி வாடுகின்றாய்
பாழும் உலகை ஓட்டுகின்றாய்—பசி
பட்டினி யால்நீ வாடுகின்றாய் (3)

ஒருநாள் இருநாள் கேட்டலுத்தாய்—மேவும்
உத்தம குணத்தைக் காட்டிவிட்டாய்
பெறுநாள்வருமென் றிருந்துவிட்டாய் - மற்றோர்
பேடி எனவுனை எண்ணவிட்டாய் (4)

சாதி பேதம் வளர்த்துவிட்டார்—அந்தச்
சழக்கர் ஒற்றுமை குலைத்துவிட்டார்
ஓதி அவர்கள் தெரிந்துவிட்டார்—செங்
கொடிக்கீழ் ஒன்றுதல் அறிந்துவிட்டார் (5)

கிளர்ந்திடு உரிமை பெற்றிடுவாய்—இனிக்
கேட்பதிற் பயனிலை உணர்ந்திடுவாய்
வளர்ந்திடு முன்னணி மருவிடுவாய்—வாழும்
வழிதனைச் சமைக்கப் புறப்படுவாய் (6)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—29-8-64)

# கொடியரின்று கொதித்தெழுதல் விந்தை

(எண்சீர் விருத்தம்)

கூட்டாட்சி வகுத்தளித்த பட்ஜெட் திட்டம்
கொள்ளையடித் திந்நாட்டைச் சூறை யாடும்
தோட்டமுத லாளிகட்கும் வர்த்த கர்க்கும்
சுகவாழ்வு வாழ்ந்துவரும் பணக்கா ரர்க்கும்
வீட்டுடைமைக் காரர்க்கும் கறுப்புச் சந்தை
வியாபாரக் கும்பலுக்கும் பதுக்கு வோர்க்கும்
வேட்டுவைத்து விட்டதனுல் வெகுண்டெ ழுந்து
விரோதியிவர் போர்க்கோலம் பூண்டு ளாரே (1)

ஆட்சியினர் செய்துவரும் முற்போக் கான
அத்தனைதிட் டங்களையும் எதிர்த்து நின்று
கூட்டாட்சிக் கூறுசெய முயன்று தோற்ற
கொடியரின்றுகொதித்தெழுதல் விந்தையன்றே
நாட்டினிலே குழப்பமுண்டு பண்ணி மக்கள்
நன்மதிப்பை யிழந்துநிற்கும் யூஎன் பீயை
மீட்டுமிங்கே ஆட்சியினில் அமர்த்து தற்கே
விரோதியிவர் போர்க்கோலம் பூண்டு ளாரே (2)

ஆட்சியினில் யூஎன்பீ இருந்த காலை
அமெரிக்க ஏகாதி பத்தி யத்தின்
கோட்டையென இந்நாடு மாறி இங்குக்
கொலனியலிஸ்ட் பிற்போக்குக் கத்தோ லிக்க
கூட்டத்தார் மக்களுக்கு இழைத்த துன்பம்
கொஞ்சமன்றே மக்களிதை மறக்க வில்லை
நாட்டுநலன் கருதுமக்கள் மீண்டும் இந்த
நயவஞ்சர் ஆட்சியினை நத்து வாரோ (3)

நாட்டவர்கள் திரண்டொன்ருய் பேதம் நீக்கி
நல்லாட்சிக் காபத்து விளைக்க எண்ணும்
கூட்டத்தை கொன்ருெழித்து கொள்ளைக் காரக்
கோஷ்டியினர் வாலாட்டம் இந்த நாட்டில்
மீட்டுமட்ட காசஞ்செய விடாதொ ழித்து
மேதினியோர் போற்றுகின்ற மக்கள் ஆட்சி
நாட்டிவிட இந்நாட்டில் ஒன்று சேர்வோம்
நாட்டவரே உறுதிசெய்வீர் இன்றி தற்கே (4)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—22-8-64)

# குன்றவர் மிடிமை

(அறுசீர் விருத்தம்)

இந்துமாக் கடலின் கண்ணே
இலகுறு மீழ நாட்டை
சொந்தநா டாகக் கொண்டு
சோர்விலா துழைத்து வாழும்
ஐந்திரு லட்ச மக்கள்
ஐயறி வுயிரி போல
எந்தவோ ருரிமை தானும்
இன்றியே உழல்கின் றாரே (1)

அந்தணன் புத்த னீந்த
அருமறை பௌத்தம் வாழும்
அந்தரத் தீவென் றன்றோ
சொல்லுறா ரிதனை இங்கோ
மந்தைபோல் மனிதக் கூட்டம்
மாக்களிற் கீழாய் நாளும்
நிந்தனைக் குள்ளா கிறதே
நீளுல கறியா திதனை (2)

குன்றுவாழ் இவரோ வாழ்வின்
கொடுமைக ளெல்லாஞ் சுமந்து
துன்புறு கின்றார் வாழ்வோ
சோகமே நிறைந்த கதையாய்
நின்றிடா திறுதி மட்டும்
நீளுதே வாழ்வின் இன்பம்
என்றுமே கானல் நீராய்
ஏகுதே என்னே வாழ்வு (3)

காட்டினைத் திருத்தி றப்பர்
கன்றோடு தெயிலை சோப்பி
நாட்டியே நாளும் போதும்
நடுக்குறும் **பனி**யும் மழையும்
வாட்டிடும் பசியும் உடலை
வருத்திடும் பிணியும் பாரா
தோட்டியே வாழ்வை விலங்காய்
உழைத்துழைத் தோடா னாரே (4)

அன்னவர் முயற்சி யாலே
ஆயிரம் லட்சம் கோடி
என்றயல் நாட்டில் எங்கள்
செல்வமோ குவியு தானுல்
இன்னவர் வாழ்வின் தரத்தில்
ஏற்றமோ சிறிது மின்றி
துன்பமே படுகின் றாரே
துயரினைத் துடைப்பார் இன்றே (5)

சங்கமோ பத்தி ருக்கும்
சடுதியாய் வேலை நிறுத்தம்
எங்குமே நடக்கும் எனினும்
இவரது தரித்தி ரத்தில்
கொஞ்சமும் குறையா தென்றும்
கூடிடும் வாழ்வு மேலும்
சஞ்சலம் நிறைந்த தாகி
தாழ்வுறும் தளர்வு நீங்கா (6)

(பாட்டாளிப்பாவலன்)

## கொதித்தெழுகின்றனர்

(எழுசீர் விருத்தம்)

பாரடா தோழா பாரினைச் சுற்றி
படருது செம்மையே எங்கும்
ஆரடா எம்மை அடக்குவர் என்றே
ஆர்ப்பரித் தெழுகிறுர் எம்மோர்
ஓரடா தோழா ஒருகோடிக் கீழே
ஒன்றுபட் டொருபெரும் புரட்சிப்
போரினைச் செய்யில் புவியினில் எங்கும்
பொதுமையே பொலிந்திடு மன்றே (1)

நாட்டினை ஓம்பும் நம்மவர் வாழ்வு
நலிந்திட உழைத்திடா திருந்து
வீட்டினில் உண்டு வீங்கிட வயிறு
மிகுதியா யின்பினில் திளைக்கும்
கூட்டமே பெருக குவலய மெங்கும்
கொதித்தெழு கின்றனர் எம்மோர்
நாட்டிலே விரைவில் நம்மவர் ஆட்சி
நாட்டிட உழைத்திடு தோழா (2)

(பாட்டாளிப்பாவலன்)

# நல்லாட்சிக்கு ஆயத்தம் செய்வோம்

(எண்சீர் விருத்தம்)

வெள்ளையனிந் நாடாண்ட வேளை யிங்கு
பேலமுத லாளிகளால் மிக்க செல்வம்
கொள்ளையாகத் திரட்டுதற்குக் கொண்டு வந்த
கூலிகளாம் தோட்டத்து தொழிலா ளிகளோ
வெள்ளையரின் ஏவலராய் விளங்கு கின்ற
விதேசவடி வருடிகளாம் யூஎன் பீயால்
மெள்ளமெள்ள உரிமையெலாம் பறிக்கப் பட்டு
மிகுதுன்பம் உறுகின்றார் இன்றிந் நாட்டில் (1)

அன்றிருந்த யூஎன்பீ அவர்தம் உரிமை
அபகரிக்கப் பார்த்திருந்த தமிழத் தலைவர்
இன்றவரின் உரிமைக்காய்க் குரலெ ழுப்பல்
ஏமாற்று வித்தையன்றி வேறென் சொல்வீர்
தந்நலத்தைக் காப்பதிலே கருத்தாய் இருக்கும்
தமிழ்த்தலைவர் தோட்டத்து தொழிலா ளிகளின்
இன்னலினைத் துடைப்பதற்கு எதுவுஞ் செய்யார்
தேர்ந்திடுவீர் தோட்டத்து தொழிலாள் வோரே

மொழிவெறியைத் தூண்டிவிட்டு முன்னர் நாட்டின்
மொழிச்சிக்கல் தீர்வதற்கு முட்டுப் போட்ட
மொழிவெறியர் இனவெறியைக் கிளறி நாட்டின்
முன்னேற்றந் தனைத்தடுத்தார் பின்னர் இன்றோ
தொழிலாளர் நடுவினிலே இனவா தத்தைத்
தோற்றியவர் தமைப்பிரிக்க முயலு கின்றார்
விழிப்புற்ற தோட்டத்துத் தொழிலாள் வோர்கள்
வீழ்ந்திடவே மாட்டாரிவ் வஞ்சர் வலையில் (3)

தோட்டத்துத் தொழிலாள மக்கள் எல்லாம்
ஒழித்தெல்லா வேற்றுமையும் ஒன்று சேர்ந்து
கூட்டாக ஓரணியில் நின்று தங்கள்
கோரிக்கை தனையடைய உறுதி கொண்டால்
வேட்கின்ற உரிமையெலாம் பெற்றிந் நாட்டில்
விரைவினிலே தொழிலாளர் நலத்தைப் பேணும்
ஆட்சியொன்றை அமைத்திடுதல் சாலும் தோழா
அதற்கான ஆயத்தம் செய்வோம் இன்றே (4)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—5-9-64)

# நிறவெறி ஒழிக
(அறுசீர் விருத்தம்)

நிறத்தினுற் பேதங் காட்டி
நீக்கிரோ தமைய டக்கிப்
பறித்தவ ருரிமை யாவும்
பரம்பரை யடிமை சொண்ட
நிறவெறி மிக்க மாலான்
நேர்வழி வந்த வர்வுட்
கறுப்பரி னுரிமைப் போரைக்
கண்டுளங் கொதிக்கின் ருனே (1)

நாசிச பொஸ்ரர் தந்த
நனிகொடுஞ் சட்டங் கொண்டு
வீசிவெஞ் சிறையில் நீக்ரோ
வீரரை வதைத்தொ டுக்கிக்
தேசிய விழிப்பு ணர்ச்சி
தீய்த்திட முயலு மூர்க்கன்
காசினி யெதிர்ப்பைக் கூடக்
கருத்தினிற் கொண்டா னன்றே (2)

விடுதலை கோரி நிற்கும்
வீரரைச் சிறையி லிட்டும்
நடுத்தெரு நாய்க ளென்ன
நையவே புடைத்துங் கோரக்
கொடுமைகள் செய்து மென்ன
கோதிலாப் பணிமேற் கொண்ட
நெடும்புகழ் வீர ரன்னூர்
நெஞ்சமோ தளர்ந்தா ரன்றே 3)

விடுதலை பெறுவோ மின்றேல்
வீரமாய் மடிவோ மென்றே
தொடுத்தபோர் விடாது மேலுந்
தொடர்கிறுர் கண்டு வர்வுட்
ஒடுக்கிடப் போரை யன்னூர்
உயிரினை வாங்கு கின்றுன்
தடுத்திட அவனை யெந்தச்
சத்தியு மில்லை யாங்கே (4)

பிரிட்டனும் அமெரிக் காவும்
பிரஞ்சுமேல் ஜெர்ம னீயும்
விரும்பிடு வண்ணம் வர்வுட்
விடுதலைப் போரொ டுக்கத்
த[illegible]கிறா ராயு தங்கள்
தாரணி யெதிர்க்கக் கண்டும்
பொருதிடு மடிமை அந்தோ
போரினில் மடிகின் றானே (5)

மண்டலா சிசுலு போன்றே
மரணதண் டனைக்குள் ளாகி
எண்ணிலாத் தேச பக்தர்
இறக்கிறார் நாளு மங்கே
தன்னின விடுத லைக்காய்ச்
சமர்தொடுத் தின்ன லேற்றே
இன்னுயி ரீவோர்க் கெல்லாம்
எந்தலை தாழ்த்து வோமே (6)

கொலனியல் முதலா ளித்வ
கொடுமன வெறிய ராட்சி
இலகுறு நாட்டி லெல்லாம்
இனமொழி சமய சாதி
குலத்தது பேரால் நாளும்
குழப்பமும் கொலையு மிக்கு
நிலவுதல் புதுமை யன்றே
நீளுல கோரே யோர்மின் (7)

நிலவிடு பேதம் யாவும்
நீங்கியே மக்கள் எல்லாம்
தலைநிமிர்ந் துரிமை யோடு
சரிநிகர் சமான மாக
குலவிட சோஷ லிஸ்டு
குடியர சாட்சி யொன்றே
உலகினுக் கின்று வேண்டும்
உணர்ந்திடும் மக்காள் நீவிர் (8)

(பாட்டாளிப்பாவலன்—தேசாபிமானி—27-6-64)

## அறிவராய வெளியீடுகள்

(1) பிரிந்திடவே வேண்டுமடா (கவிதை) 50 சதம்
(2) வரலாறறியா மாமூடன் (கவிதை) 80 சதம்
(3) தூக்கியெறி பார்ப்பனீயம் (கவிதை) 50 சதம்
(4) கடற்கரையிலே (கவிதை) 60 சதம்
(5) கொக்கூர்கிழான் கவிதைகள் ரூபா 1-65 சதம்

Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

இடைக்...டம்: கா. வை. இரத்தினசிங்கம்
'செய்யகம்'
கே. கே. எஸ். ரோட்,
சொக்குவில்

...தந்திரன் அச்சகம், 194 ஏ, பண்டார...யக்க மாவத்தை
கொழும்பு—12.